விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- எட்டு + பதினாறு Registered as a News paper in Sri Lanka

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்


# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி20 வியாழக்கிழமை (05.09.2002) தொலைபேசி 3378 ஒலி 260







## நல்லூர்க் குமரனின் அற்புதத்தேர் இன்று

## சமாதான முயற்சியில் பெரும் முன்னேற்றம்

# விடுதலைப்புலிகள் மீதான தடை இன்று அதிகாலையுடன் நீக்கம்!

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன அறிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கை அரசாங்கத்தால், தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை இன்று அதிகாலை முதல் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன அறிவித்துள்ளார்.**

**விடுதலைப்புலிகளின் தடை நீக்கம் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.**

இம்மாதம் 16ம் திகதி தாய்லாந்தில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைக்குரிய சுமூகமான சூழலை உருவாக்கும் நோக்குடன் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக நேற்று நடைபெற்ற விசேஷட அமைசசரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த விஷேட அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமுகமளிக்காத நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடையை இன்று அதிகாலைமுதல் நீக்குவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையின் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று நள்ளிரவு விஷேட வர்த்தமானி அறிவித்தல்தலை வெளியிட்டார்.

தலதாமாளிகைக் குண்டு வைப்பு, கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றிய போது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து 1998ம் ஆண்டு ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்யும் பிரகடனத்தை வெளி

(08ம் பக்கம் பார்க்க)

**சமாதானப் பேச்சு வெற்றிபெற**

## அஸ்கிரிய– மல்வத்த பீடாதிபதிகள் பிரதமருக்கு ஆசி வழங்கினர்

(கொழும்பு)

இம்மாதம் 16,17,18ம் திகதிகளில் தாய்லாந்தில் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளின் ஆசி கிடைத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

சமாதானப்பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டும் என நேற்று அஸ்கிரிய, மல்வத்த பீடங்களுக்குச் சென்ற பிரதமர் பௌத்த பீடாதிபதிகள் இருவரையும் வணங்கி ஆசி பெற்றார்.

பிதமருக்கு ஆசி வழங்கிய மகாநாயக்கர்கள் பேச்சுவார்த்தைக்கு

(08ம் பக்கம் பார்க்க)

## புதிய பரிவர்த்தனை நிலையம் 11ந் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்

## அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 16ம் திகதி தாய்லாந்தில் அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைக்குரிய சுமூகமான சூழலை உருவாக்கும் நோக்குடன் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக நேற்று நடைபெற்ற விசேஷட அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த விஷேட அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமுகமளிக்காத நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடையை இன்று அதிகாலைமுதல் நீக்குவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையின் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று நள்ளிரவு விஷேட வர்த்தமானி அறிவித்தல்தலை வெளியிட்டார்.

தலதாமாளிகைக் குண்டு வைப்பு, கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றிய போது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து 1998ம் ஆண்டு ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்யும் பிரகடனத்தை வெளி

(08ம் பக்கம் பார்க்க)

தாய்லாந்தில் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளின் ஆசி கிடைத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய, மல்வத்த பீடங்களுக்குச் சென்ற பிரத[illegible] பௌத்த பீடாதிபதிகள் இருவரையும் வணங்கி ஆசி பெற்றார்.

பிதமருக்கு ஆசி வழங்கிய மகாநாயக்க[illegible]ள் பேச்சுவார்த்தைக்கு

(08ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறைச் சம்பவம் குறித்து யாழ். பாதுகாப்பு தலைமையகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரில் 524வது படையணியின் தலைமையகத்தில் கடந்த 2ந் திகதி இடம்பெற்ற சம்பவம் குறித்து யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று பத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த 2ம் திகதி 524வது படையணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற சம்பவத்தை கட்டுப்படுத்துவதற்கு கண்ணீர்ப்புகைக்குண்டு வீசப்பட்டமை குறித்து பல்வேறு வகையில் பல்வேறு அமைப்புக்களும், நபர்களும் பல்வேறான தகவல்களை தெரிவித்துள்ள போதிலும், அங்கு நடந்தது என்ன? பாடசாலைப் பிள்ளைகள், பொதுமக்கள் மற்றும் விடுதலைப்புலி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து படையணித்

(08ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் பலர் படையினரால் தாக்கப்பட்டனர்

(மந்திகை)

பருத்தித்துறை 524 ஆவது படையணிப் பகுதியில் இடம்பெற்ற மாணவர் போராட்டத்தையடுத்து அப்பகுதியில் பலர் படையினரால் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாம் அமைந்துள்ள பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் வசிக்கும் பலரே கடந்த 2ம் திகதி இரவு படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

படையினரால் மோசமாகத் தாக்கப்பட்ட அல்பேட் கொன்சன் ரைன்

(08ம் பக்கம் பார்க்க)

# நல்லூர்க் கந்தன் தேர் இன்று

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

வசந்தமண்டப பூசை, தம்பபூசையைத் தொடர்ந்து 7மணியளவில் சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.(ந)

# புதிய பரிவர்த்தனை நிலையம் 11ந் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்

## அமைச்சர் இம்தியாஸ் யாழ் வருவார்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைக்கப்பட்டுவரும் மேலதிக புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தை எதிர்வரும் 11ந் திகதி புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ரெலிகொம் நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பரிவர்த்தனை நிலையத்தின் மேலதிக தொலைத்தொடர்புப் பின்னலையும், ஆளியையும் ஆரம்பித்து வைப்பதன் மூலம் யாழ் குடாநாட்டு மக்களின் தொலைபேசி இணைப்பு சேவையின் தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்படவுள்ளதாகவும்

(08ம் பக்கம் பார்க்க)

# சமுர்த்தி நிவாரண வெட்டில் வடக்குக் கிழக்கிற்கு சலுகை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் சமுர்தி நிவாரணம் 25 வீதத்தினால் குறைக்கப்படவுள்ள போதிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேற்படி நிவாரண வெட்டில் சலுகை வழங்கப்படுமென சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ். பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைபடுத்தல் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சமுர்த்தி நிவாரணத்துக்கான நிதி ஒதுக்கீட்டை திறைசேரி குறைத்தத

(08ம் பக்கம் பார்க்க)

## அரசு- புலிகள் பேச்சு

# ஜனாதிபதியின் பிரதிநிதியாக லக்ஷ்மன் கதிர்காமர்?

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி சந்திரிகாவின் பிரதிநிதியாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் கலந்து கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு நோர்வே அரசின் மத்தியஸ்தத்தை ஏற்படுத்துவதில் லக்ஷ்மன் கதிர்காமர் கூடிய பங்காற்றியிருந்தார். தாய்லாந்தில் நடைபெறவுள்ள முதற்

(08ம் பக்கம் பார்க்க)

# வை. கோவுக்கு தொடர்ந்து மறியல்

(சென்னை)


பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமியை இம்மாதம் 30ம் திகதி வரை தொடர்ந்து காவலில் வைக்குமாறு பூந்தமல்லியில் உள்ள பொடா வழக்குகளை விசாரிக்கும் நீதிபதி ராஜேந்திரன் நேற்று உத்தரவிட்டுளார்.

(க-5)

உள்ளே

நான்கு
வர்ணங்களிலான
நல்லூர்த்
தேர்த்திருவிழாச்
சிறப்பு மலர்
(16 பக்கங்கள்) இலவச
இணைப்பை
வலம்புரியுடன் தவறாது
கேட்டு வாங்குங்கள்.

விலை ரூபா: 5/= மட்டும்



சிறு விளம்பரம்

இடர்விலக
இறைவனைப்
பிரார்த்திப்போம்

சமாதான முயற்சிகள் நீடித்து நிலைபெற சிவபுராணம் தினசரி வழிபாடுகளில் ஓதுவதுடன் வெள்ளிக்கிழமை விரதவழிபாட்டில் சகலரும் இணைந்துபணிபுரிக
இந்து அரசஊழியர்களின் இணையம் வே.கெ.தனபாலன் புதுக்குளம் மகாவித்தியாலயம் வவுனியா.

(5877)

### யாழ் குடாவில் கொலரா அபாயம்

# உணவுச்சாலைகளில் சுத்தம் பேணுமாறு

# தமிழீழ சுகாதாரச் சேவைப்பிரிவு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
குடாநாட்டில் இனங்காணப்பட்டுள்ள கொலரா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் அனைவரையும்ஒத்துழைப்புவழங்குமாறுதமிழீழசுகாதாரசேவை பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் அத்துடன் சுகாதாரசீர்கேடாக நடந்து கொள்ளும் உணவகஉரிமையாளர்கள்மீது தமிழீழசுகாதாரப்பகுதியூடாக உரியசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழீழ சுகாதாரப்பிரிவினர்அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ்ப்பாணம் தீவகப்பகுதியின் மெலிஞ்சிமுனைக்கிராமத்தில் 28.8.2002ல்கொலரா நோயினால் வயோதிபத்தாயான செ.அன்னம்மா (வயது65)என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது 30.8.2002அன்று பரிதாபகரமாக இறந்துள்ளார்

மேலும் எட்டுப்பேர் பாதிப்பிற்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர்

மேற்படி தகவல் அறிந்த தமிழீழ சுகாதார சேவையினர்,தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் உதவியுடன் அங்கு உரிய சிகிச்சை தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நோய்த் தொற்றை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்

தொடர்ந்தும் அங்குதங்கி நின்று கண்காணிப்பை மேற்கொண்டு வருவதுடன் கொலரா சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்குகளை மக்களுக்கு அறிவுறுத்துவதுடன் அப்பகுதி அரசியல் துறையினரின் உதவியுடன் கிணறுகள் சுத்தப்படுத்தி குளோரின் இடப்படுகிறது-

கொலரா மேலும் பரவாது இருக்க தனிநபர் ஒவ்வொருவரும் சுகாதாரமாக இருப்பதுடன் உணவு, தேனீர்,குளிர்களி போன்ற உணவு உற்பத்தி விற்பனைசெய்வோர்தங்களது நிலையங்களை மிகவும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். அவ்வவ்வேளைகளில்சமைத்த உணவுவகைகளை அவ்வவ் வேளைகளில் மட்டும் விற்பனை செய்தல் வேண்டும.

உணவுகளில் இலையான்கள் மொய்க்காது பாதுகாத்துக்கொள்வதுடன், இலையான்கள் உற்பத்தியாகும் இடங்களை தேடி அழித்தல் வேண்டும், குடிநீரைக் கொதிக்க வைத்துப் பருகுதல் வேண்டும் பழைய உணவுப்பொருட்கள் விற்பனை செய்வதைமுற்றாக தவிர்த்தல் வேண்டும் குளிர்களி குளிர்பானம் (சர்பத், யூஸ்) போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுமநீர்கொதிக்கவைத்து ஆறவைத்த நீராக இருத்தல் வேண்டும்

மேலும உங்கள் நிலையங்களின் ஊடாக சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுாளது.

(த)

---

# நல்லூர் பிரதேசசபை

## திருநெல்வேலி நவீனசந்தை

## மேல்மாடிக் கடைகள்

# கேள்வி அறிவித்தல்

**கடை இல: 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 12, 13, 14, 16.**

நல்லூர் பிரதேச சபையின் திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக் கடைகள் 2002ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் 23.09.2002ம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர் நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன்பேரில் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் 16.09.2002ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் கீ. மணி, பொருட்கள் சேவைகள் வரி (ஜீ எஸ். ரீ) என்பவற்றின் முழுத்தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு:-**

1) கேள்விப் பத்திரத் தொகையுடன் 12.5% பொருட்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரீ) செலுத்தப்படல் வேண்டும்.
2) ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்குமட்டும் விண்ணப்பிக்க முடியும்.
3) தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக தொகையின் 12.5% பொருட்கள் சேவைகள் வரியாக (ஜீ. எஸ். ரீ) செலுத்தப்பட வேண்டும்.மேற்படி தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
4) ஆகக்குறைந்த கேள்வித்தொகைக்குக் கீழ் குறிப்பிடப்படும் கேள்விக்காரரின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5) தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கீ.மணி (ஜீ.எஸ்.ரீ தவிர்ந்த) |
|---|---|---|---|
| 01 | 500.00 | 10,000.00 | 157,500.00 |
| 02 | 500.00 | 10,000.00 | 157,500.00 |
| 03 | 500.00 | 10,000.00 | 108,000.00 |
| 04 | 500.00 | 10,000.00 | 108,000.00 |
| 05 | 500.00 | 10,000.00 | 108,000.00 |
| 06 | 500.00 | 10,000.00 | 108,000.00 |
| 07 | 500.00 | 10,000.00 | 157,500.00 |
| 08 | 500.00 | 10,000.00 | 157,500.00 |
| 09 | 500.00 | 10,000.00 | 144,000.00 |
| 10 | 500.00 | 10,000.00 | 144,000.00 |
| 12 | 500.00 | 10,000.00 | 126,000.60 |
| 13 | 500.00 | 10,000.00 | 126,000.00 |
| 14 | 500.00 | 10,000.00 | 126,000.00 |
| 16 | 500.00 | 10,000.00 | 216,000.00 |

க. மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்)
தலைவர்

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
03.09.2002
(கி-4963)

---

# இராசி பலன்

5-9-2002

(ஆவணி 20, வியாழன்)
திரயோதசி பி.ப.1-27வரை
ஆயிலியம் மு.இ. 11·19வரை
இராகுகாலம் 1'34 - 3.04
நல்லநேரம் 7.34 - 904
சித்தாமிர்தம்

**மேடம்**
மனச்சோர்வு, உடல்நலக் குறைவு, காரியதாமதம் கல்விச் சிறப்பு.

**இடபம்**
அன்னியர் சந்திப்பு முயற்சி பலிதம், பிரயாண நன்மை. தனவரவு;

**மிதுனம்**
வாக்குமேன்மை முயற்சி ஜெயம், இலட்சுமிகரம் தொழில் கஷ்டம்,

**கடகம்**
தெய்வ நம்பிக்கை காரிய சித்தி, வாய்த்தர்க்கம் தன விரயம்;

**சிங்கம்**
திடீர் பயணம், அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், பணச் செலவு.

**கன்னி**
தொழில்லாபம், கௌரவமான நிலை தெய்வதரிசனம், காரிய நன்மை.

**துலாம்**
அதிகாரம், பிறரால் உதவி கடினமுயற்சி நல்லசெய்தி·

**விருச்சிகம்**
உடல்நலக்குறைவு; புதிய சிந்தை,மனசஞ்சலம். முயற்சி தாமதம்,

**தனுசு**
போசனசுகம், எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சி தாமதம், பிரயாண பயம்.

**மகரம்**
நண்பர்கள் உதவி, நல்ல வரவேற்பு, தனவரவு, காரிய அனுகூலம்.

**கும்பம்**
இனிய சம்பவம், அதிக பிரயாசை, பெரியோர் சந்திப்பு, முயற்சி பலிதம்

**மீனம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு, மனச் சோர்வு, குடும்பக் கவலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

## ஒன்றுகூடலும் விமர்சனஅரங்கமும்

(யாழ்ப்பாணம்)
யாழ்பாண திருமறைக்கலா மன்றத்தினால் அண்மையில் அரங்கேற்றப்பட்ட ஸ்பாட்டக்ஸ் நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கான விசேட ஒன்றுகூடலும் விமர்சன அரங்கமும் நாளை மாலை 5மணிக்கு மன்றக் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நாடகத்தையும் அதில் கலந்துகொண்ட கலைஞர்களையும் பற்றிய விமர்சனங்களையும் முன்வைக்க விரும்புபவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளமுடியும்;

(த-6)

## வணிகர்கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்துவர்த்தகர்களையும் வணிகர்கழகத்தின் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளுமாறு யாழ்வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது

(த-6)

## ஆசிரியையின் சங்கிலிஅறுப்பு

(வட்டுக்கோட்டை)
வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் சங்கிலிமோட்டார் சைக்கிளில் சென்றவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது;

(த-262)

## நல்லூரான் திருவடிக்கு-24



### நின்னருள் தந்தருள் வாயே

எத்தனை எத்தனை கோடியுடல்
இத்தரை மீதில் எடுத் தெடுத்து
எண்ணிக் கணக்கிட முடியாதே
ஏங்கித் தவிக்கும் எமக்கெல்லாம்

அத்தனாம் அம்பலக் கூத்தனவன்
அருள்விழி தோன்றிய அழகோனே
அன்னையாம் அம்பிகை அரவணைப்பில்
அறிதுயில் கொள்ளும் அமுதோதே

சக்திகள் மாரிரு பேர்தழுவும்
சண்முகத் தாமரை முகத்தோனே
சந்ததம் நின்னிரு சக்திகளாய்
தாம் தொழும் ஞான சத்தியனே

நித்தமும் நல்லையில் நாம் தொழவே
நின்னருள் பாலிக்கும் கதிர்வேலோய்
நின் மல சடாட்சர சண்முகனே
நின் மலர்ப் பதமெமக் கருள்வாயே

பண்டிதர் சி கார்த்திகேசு சேந்தன்

### இரதம் ஏறிவருவாய்

வண்ணமயில் மீதமர்ந்து
வள்ளி தெய்வயானையுடன்
நல்லை யம்பதி வீதி வரும்
நாதனே திருக்குமரா
தொல்லைகள் நீங்கி
நல்லவை நடக்க
அழகு ரதம் ஏறிவந்து
அருளாட்சி தருவாய்

பா ஷோபனா

### சரணடைந்தோம் முருகா

ஆடிவாரான் கந்தன் ஆடிவாரான்
அலங்காரத் தேர் தனில் ஆடிவாரான்
கந்தன் என்ற பெயருடையான் ஆடிவாரான்
கலியுக வரதனாம் ஆடிவாரான்
சக்தி வேல் கைப் பிடித்தோ ஆடிவாரான்
சங்காரம் செய்திட ஆடிவாரான்
ஈசனுமை பாலகனே ஆடிவாரான்
உன் இணையடியே சரண் அடைந்தோம்
ஆடிவாராய்

நல்லூரான்

### பாதி விழி திற போதும் அது

பாதி விழி திற போதும் அது அணி
சூடி உலவிடும் எழிலாளா
பாகம் அமர் கனிமாதர் இருவரின்
காதல் இனி மொழி நினைவோனே
மாயன் அருளிய மாதர் கணவனை
கூடி அனைவரும் தொழுவோமேல்
பாத மலர் விழிகாண அவனருள்
கூடி வரும் வரம் அருள்வானே
தோகை மயிலினில் ஏறி சுடர்ஒளி
வீசி ஒளிர்கிற இளையோனே
சோதி வடிவினன் நாத உருவினன்
சோலை எழிலினன் முருகோனே
ஆசி தருகுவன் வாரி அவனருள்
பாயும் பருகுவம் வருவாயே
ஆடி வரும் எழில் காண உருகிடும்
ஆவி சொரியும் சண் நல்லையூரானே

பவித்திரன்

### தேர் பவனி காணல்

நல்லூரே விண்ணுலகு நமக்கென்று ஒருமித்துச்
செப்பிடடா
நல்லூரான் இருப்பிடமே விண்ணுலகமாகுதப்பா
நல்லூரான் தேர் பவனி காண உம்பரெல்லாம்
கூடிவிட்டார்
நல்லூரில் தேர் என்றால் விண்ணுலகும் வெறித்
திடுமே!

வை. சி. சிவசுப்பிரமணியம்

### வரந்தருவாய் வள்ளலே

புரந்தரனின் புதல்விதேவ யானைமண வாளா!
புள்ளிமயில் ஏறிவரும் பாலகனே! குகனே!
இரந்தழுமெம் குரலுனக்குக் கேட்டிலையோ? நாதா!
இன்னலதை நீக்கிவிடு சண்முகனே! சரவணனே!
நிரந்தரமாய் அமைதியிங்கு நிலவிடவே நாளும்
நல்லைநகர் உறைபவனே! தேரேறுங்கந்தவேளே!
வரந்தருவாய் வள்ளியவள் நாயகனே! முருகா!
வையமதில் வளமுடனே வாழ்வதுவே விளங்க!

ப. மகேந்திரதாசன்

# சமாதானப்பேச்சு தாய்லாந்தில் நடக்க இடமளிக்கவேண்டாம்

## தேசிய மகாசங்க சம்மேளனம் கோரிக்கை

அரசு-புலிகள் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் இடம்பெற விருப்பதுகுறித்து தேசிய மகாசங்க சம்மேளனம் எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய மகாசங்க சம்மேளன உறுப்பினர்கள் சந்திப்பில் தலைவர் எல்லாவெல மேகானந்த தேரர் இவ் எதிர்ப்பை வெளியிட்டார்.

அத்துடன், பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்படும் விடுதலைப் புலிகளுக்கு பௌத்தநாடான தாய்லாந்தில் இடமளிக்க அனுமதிக்கக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் விடயங்களை அடக்கி மேற்படி சங்கத்தினர் தாய்லாந்து அரசுக்கு அவசரசெய்தி ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர். (உ-7)

## புலிகளின் தடையை நீக்குமாறு

# தே.ஐ. முன்னணித் தலைவி பேரியல் ஜனாதிபதியை சந்தித்து கேட்பார்

(கொழும்பு)

தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகள் மீதான தடையை நீக்குமாறு தேசிய ஐக்கிய முன்னணி, ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரவுள்ளது.

கட்சியின் தலைவியான பேரியல் அஷ்ரப், கட்சி உறுப்பினர் ஹிஸ்புல்லா ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து தமது நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படாத பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை சாத்தியமற்றுப் போகும். அதேவேளை இனப் பிரச்சினைக்கான தீர்வையும் காணமுடியாத நிலை ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக புலிகள் மீதான தடை நீக்கத்தை தாம் விரும்பவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் பொ. ஐ. முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணி இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# யாழ்ப்பாணப் பகுதியில் வாந்திபேதி அபாயம் உருவாகியுள்ளது

ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இதுவரை ஐவர் வாந்திபேதி நோயினால பீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் இறந்துள்ளார்.

வாந்திபேதி ஒருஆபத்தான இறப்பை உண்டாக்கும் நோயாகும். இந் நோயைஉண்டாக்கும் கிருமி (VIBRIO CHOLERA) விப்பிரியோ கொலறா என்னும் பக்டீரியா ஆகும்.

நோயாளி ஒருவரின் மலத்துடன் வெளியேறும் கிருமி- உணவு, நீர் கைகள் போன்றவை மூலம் வாய்மூலமாகசுகதேகி ஒருவரின் உடலுட்சென்று நோயை உண்டாக்கும். அதிகளவு நீர்த்தன்மையான மலம், சத்தி ஆகியவை காரணமாக நோயாளி நீரிழப்பு ஏற்படுவதனால் இறக்க நேரிடுகிறது. காலதாமதமின்றி அவசர சிகிச்சைபெறுவதால் மரணத்தைத் தவிர்க்க முடியும்.

மேலும் பின்வரும் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதால் வாந்திபேதி நோய்த் தொற்றைத் தவிர்க்கலாம்.

01. எப்பொழுதும் பாதுகாப்பான நீர் அருந்துதல் கொதித்தாறிய நீர் பாதுகாப்பானது. பிள்ளைகள் பாடசாலைக்குக் கொண்டு செல்ல பாதுகாப்பான நீர் கொடுத்து விட வேண்டும்.
02. எப்போதும் மலங்கழிப்பதற்கு மல கூடத்தையே பாவிக்க வேண்டும். சிறுவர்மலத்தையும்மலகூடத்தில் இடுதல் வேண்டும்.
03. மலகூடம் சென்றபின், உணவு அருந்துமுன், உணவு பரிமாற முன்பும் கைகளைச் சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல் வேண்டும்.
04. கீரைவகைகளைப் பல முறை கழுவியும், அவித்தும்உண்ணல், பழங்களையும் நன்கு கழுவியும், தோல் உரித்தும் உண்ணுதல் வேண்டும்.
05. சமைக்காத உணவுவகைகளான குளிர்பானம் ஐஸ்கிறீம், சர்பத், போனறவற்றைத் தவிர்த்தல்.
06. வீட்டில் தயாரித்தஉணவுகளை மாத்திரம் உண்ணுதலும், பாடசாலைசெல்லும் சிறுவர்களுக்குக் கொடுத்தும் விடுதல்.
07. சமைத்த உணவை உடன் உண்ணல், எஞ்சிய உணவைத் திரும்பவும் நன்கு கொதிக்கவைத்து உண்ணல்.
08 உணவைநன்குஇலையான் தூசி படியாமல்மூடிவைத்தல் திறந்து விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்பதைத் தவிர்த்தல்.
09. குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்றுவதன் மூலம் இலையான் உற்பத்திஆவதைத் தடுத்தல்
10. நோயாளியைப் பராமரிப்பவர் தடைச் சிகிச்சை பெறுதலும் சிறந்த தற் சுகாதாரநிலைமை பேணுதல்.
11. நோயாளி பாவித்ததுணிகள், உபகரணம் ஆகியவை தொற்று நீக்கம் செய்தல்.

வாந்திபேதி நோயால் 90% மானோர் சிறியளவில் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் அறிகுறிகளற்ற நோய்க் காவிகளாக இருந்து இந்நோயைப் பரப்பிக் கொண்டு இருப்பர். இதனால் இந்நோயைக் கட்டுப்படுத்த மக்கள் இந்நோய் பற்றிய அறிவுடன், விழிப்புணர்வுடன் செயற்படுதல் இன்றியமையாதது ஆகும்

தவறும் பட்சத்தில் வாந்தி பேதி நோய் எமது பகுதிக்குப் பாரிய விளைவுகளைஏற்படுத்தும்.

பொதுமக்கள் தங்கள் சுகாதாரத்திற்குத் தாங்களே பொறுப்பு என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வாந்திபேதியைஒழிக்கமுன்வரவேண்டும். என்று, யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். ■

# மாணவர்களிடம் அதிக பணம் அறவீடு

## பெற்றோர் அதிருப்தி

(உடுவில்)

மாகாணமட்ட, நாடளாவிய ரீதியில் இடம் பெறும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வெளியிடங்களுக்கு செல்லும் மாணவர்களிடம் சில பாடசாலை நிர்வாகங்கள் அதிகளவு பணத்தினை அறவிடுவதாக பெற்றோர் தரப்பில் குறை கூறப்படுகிறது-

வசதி குறைந்த பாடசாலைகள் சில குறைந்த செலவில் பாடசாலை மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்லும் அதேவேளை வசதியான பாடசாலைகள் கூடிய பணத்தை இதற்காக மாணவர்களிடமிருந்து அறவிடுவதாக தெரியவருகிறது.

இதே வேளை, கடந்த காலங்களில் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை மூடப்பட்டிருந்த வேளையில், மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்வதற்காக பணத்தினை அறவிட்ட பாடசாலைகள், இலவசகப்பற் சேவையில் அவர்களை அழைத்துச் சென்று வந்த பின்பும் அறவிட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவோ அல்லது அதற்கான எந்தவித கணக்குகளை காட்டவோ இல்லையெனவும் பெற்றோர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (உ-261)

## கும்பாபிஷேகம்

(கொழும்பு)

வறக்காபொல அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

★ ★

காரைநகர், தங்கோடை கிராவத்தை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும்9ஆம்திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

# அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில்

# ஜேர்மனில் 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள்

## நாடுகடத்தும் நாளைஎண்ணி வாடி இருக்கின்றனர்

(தென்மராட்சி)

அரசியல் தஞ்சம்கோரிஜேர் மனிக்குச் சென்றிருந்த இலங் கைத் தமிழர்களில் சிலர் கட் டம்கட்டமாகத் திடீரென நாடுகடத்தப்பட்டு வருகின்ற னர். இந்தவகையில் அண் மைக்காலங்களில் 50 க்கு மேற்பட்ட யாழ்ப்பாணத் தமிழர் நாடுகடத்தப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என அறியப்படுகின்றது.

ஜேர்மனியில்சுமார் 50 ஆயி ரம் இலங்கைத்தமிழர்கள் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துவருகின்றனர். இத் தொகையில் சுமார் 40 ஆயிரம் பேர்வரை நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களாகவுள் ளனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள்மூலம் தெரியவருகின்றது.

இதேவேளை, அரசுக்கும்- புலிகளுக்குமிடையில் புரிந் துணர்வு உடன்படிக்கை கைச் சாத்தாகியமையைத் தொடர்ந்து, நிரந்தரவதிவிட உரிமை மறுக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டு வரு கின்றமை தெரிந்ததே.

ஜேர்மனியில் கடந்த 12 வருடங்களாக வசித்துவந்த யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்த சோமசுந்தரம் ஜீவ குமார் என்பவர் கடந்த 23 ஆம் திகதி நாடு கடத்தப்பட் டுள்ளார். அதேபோல சுமார் 7 வருடங்களாக ஜேர்மனி யில் இரு பிள்ளைகளுடன் வசித்துவந்த சாவகச்சேரி நுணாவிலைச்சேர்ந்த இளம் பெண்மணி ஒருவரும் திடீ ரென நாட்டுக்குதிருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இன் னும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனியில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினை யும் இத்தகைய நாடுகடத்தல் களுக்குக் காரணம்எனவும் கூறப்படுகிறது.

இதேசமயம், நாடுகடத்தப் படுபவர்கள் தமது நாடுகடத் தல்களைஎதிர்த்து சமஷ்டி நீதிமன்றம், நிர்வாகநீதிமன் றம், உயர்நீதிமன்றம்போன்ற வற்றில் வழக்குத்தாக்கல் செய்தாலும் அவை பெரிய அளவில் சாதகமாக இருப்ப தில்லை.

இத்தகைய நீதிமன்றங்கள் இலங்கைத்தமிழர்களின் கோரிக்கைகளை தள்ளுபடி செய்து வருகின்றன;

இது இவ்வாறிருக்க ஜேர் மனியில் 4 மில்லியன் பேர் வேலைவாய்ப்புகள் இன்றி அவதியுற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். (உ-77)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குருநகர் துணைஇழந்தோர் சங்கத்தின் ஒரு வருட பூர்த் தியை ஒட்டி, எதிர்வரும்8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கியூ டெக் நிறுவன ஏற்பாட்டில் மகளிர் விழிப்புணர்வுக் கருத் தரங்கு நடத்தப்படவுள்ளது.

● ● ●

கொழும்பு செடெக்நிறுவன ஏற்பாட்டில் இன்றிலிருந்து 9 ஆம் திகதி வரை பெண்களுக் கான சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள் ளது.

இலங்கையிலுள்ள அனைத்து செடெக்நிறுவனப் பெண்பிரதி நிதிகளும் இதில் கலந்துகொள் ளவுள்ளனர். (உ-6)

## சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்ப படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள சாரதிகளுக்கான அனுமதிப் பத்திர விண்ணப்பங்கள் வழங்குதல், மீளப் பெறுதல் நடவடிக்கைகள் இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார்போக்கு வரத்து திணைக்களம் தெரி வித்துள்ளது;

இன்னும் சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பங்களைப் பெறாதவர்கள் மற்றும் அதனை மீள ஒப்படைக்காத வர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு பின்னர் யாழ். மாவட்டமோட்டார் போக்கு வரத்து திணைக்களத்தில் இக் கடமைகளை மேற் கொள்ளலாம்.

சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பப் படிவங்களைப் புதிதாகப் பெற்று பூர்த்தி செய்து கொடுக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

## வன்முறைக் கலாசாரம் இனியும் வேண்டாம்

# மொழி, இன, மத முரண்பாடுகளை மறந்து

# இவற்றுக்கான தீர்வு குறித்து சிந்திக்க வேண்டும்

## யாழ்.வந்துள்ள பொப்றே அறைகூவல்

(தென்மராட்சி)

சமஷ்டி ஆட்சியில் மக்களு டைய தனித்துவஅடையாளம் பேணப்படுவதாலும், மதிக்கப் படுவதாலும் உலகின் பல பாகங்களிலும் சமஷ்டி ஆட்சி முறையானது மேன்மைய டைந்து வளர்ச்சிகாண்கிறது' அது அழிந்து போய் விட வில்லை சமஷ்டி என்பது பல பரிமாணங்களைக் கொண்ட தாகும்.

இவ்வாறு ஒன்ராறியோ மாநிலத்தின் முன்னாள்முதல் வர் பொப்றே செவ்வாய்க் கிழமை யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத் தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள மாற்றுக் கொள்ளைகளுக்கான நிலை யத்தின் ஏற்பாட்டில் யாழ், பல்கலைக்கழக வரலாற்றுத் துறை, சத்திரசிகிச்சைத்துறை ஆகியவற்றின் அனுசரணையு டன் இடம் பெற்ற இப் பகி ரங்கச் சொற்பொழிவுக்கு கலாநிதி. பாக்கிய ஜோதி சர வணமுத்து அறிமுகவுரை நிகழ்த்தினார்.

வைத்திய நிபுணர்தயாளன் அம்பலவணர் தொடக்கவு ரையும் வரவேற்புரையும் வழங்கினார்

முன்னார் முதல்வர் பொப்றே அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

கனடாவில் சமஷ்டி ஆட்சி முறையானது சீரும் சிறப்பு மாக இடம்பெற்று வருகின் றது. கனடா வாழ் மக்கள் அங்குள்ள அரசியலமைப்பின் பிரகாரம் தமதுஉரிமைகளைப் பெற்று வாழ்கின்றார்கள். சகலவிதமான ஆட்சிஅமைப்பு களும் ஒரேவிதமானசமத்துவ உரிமைகளையும் கொள்கை களையும் நடைமுறையில் கொண்டுள்ளன.

சமஷ்டி ஆட்சிமுறையானது இன்று சீனா, இந்தியா, ரஷ்யா, ஆபிரிக்கா, அமெ ரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மெச்சிக்கோ போன்ற நாடுக ளில் அமுலில் உள்ளது.

உலக வரலாற்றில் '0 ஆம் நூற்றாண்டு வன்முறை நூற் றாண்டாகஅமைந்துவிட்டது. வன்முறைகள் மூலம் இழப்பு கள் அதிகரித்துள்ளன.21 ஆம் நூற்றாண்டில் நாம் எமக் குள்ள முரண்பாடுகளை அறவே நீக்கி வாழ முற்பட வேண்டும்மொழிகள்ரீதியான முரண்பாடு, மதரீதியான முரண்பாடு, இனரீதியான முரண்பாடு இவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

சமஷ்டியில் மக்கள் தமது உரிமைகளை உணர்ந்துகௌர மாகவும், சுதந்திரமாகவும் தமது சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய நிலைஏற்படும். அத்துடன் மனித உரிமைகள் மதித்துப் போற்றப்படும்நாம் நாமாக வாழ வேண்டும். நாம் எமது தனித்துவ அடையாள ங்களுடன் வாழ வேண்டும்.

சுவிற்சலாந்து இலங் கையை விடச் சிறிய நாடா கும். அயினும் அங்கே மூன்று பாஷைகள் பேசப்படுகின்றன மூன்றும் அரச கரும மொழி கள். 22 கன்ரன்கள் மூலம் சமஷ்டி ஆட்சி சீருடனும் சிறப்புடனும் இயங்கிவரு கின்றது.

நாம் எமது பக்க துன்பங் களை மட்டுமே பார்த்துப் பழகி விட்டோம். சமுதாயத் தில் நாட்டில் இருக்கக்கூடிய மற்றைய மக்களின் துன்பங்க ளையும் உணர்வுகளையும் பார்க்கவும் அறியவும் முற்பட வேண்டும். சகல மக்களும் இணைந்து வாழவேண்டும்.

நான் எனக்காக இல்லை யெனில் எனக்காக யார் வாழ் வார்கள்? நான் எனக்காக மட்டுமாயின் நான் யார்? இப் போது இல்லையெனில் எப் போது? இம் மூன்று கேள்விக ளையும் நாம் அடிக்கடி எம் மிடமே கேட்டுக்கொள்ள வேண்டும் எனக்குறிப்பிட் டார்.

யாழ். பல்கலைக்கழக பட் டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் நன்றியுரை வழங்கினார். உ-77)

## வீடு தேடி தபாலில் வரும் சாரதி அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற நடமாடும் மோட்டார் போக்குவரத்துச் சேவையின் போது நடைபெற்ற சாரதி அனுமதிப்பத்திர செயல் முறைப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்கள் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தினால் அவரவர் இல்லங் களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப் பத்திரம் கிடைக்காதவர்களை இம் மாதம்15 ஆம்திகதிக்குப் பின் னர்யாழ் மோட்டார்போக்கு வரத்து திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அத்திணைக்களம் கேட்டுள் ளது. (உ)

## சுப்பர்மடம் கடற்கரையில் கடற்படை அடாவடி

(திருநெல்வேலி)

வடமராட்சி சுப்பர் மடம் கடற்கரைப் பகுதியில் கட்டப் பட்டிருந்த எம். துரைலிங்கம் என்பவரது வள்ளத்தை கடற் படையினர் முற்றாகச் சேத மாக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம்இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர் அண்மையிலேயே வன்னியில் இருந்து ஊர் திரும்பி கடன் பட்டு தனது தொழிலை ஆரம் பித்தவர் எனக் கூறப்படு கிறது.

இதேவேளை, சுப்பர் மடம் பகுதியில் படையினர் தொடர்ந்தும் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளதால்மீனவர் கள் தொழிலுக்குச் செல்லஅச் சம் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கச் சமாசத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (உ-43)

# எமது போராட்டம் வன்முறை அற்றதாக இருக்க வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கமும், முப்படைக ளும் தாம்ஒப்புக் கொண்ட வற்றை நிறைவேற்றினால் மாணவர்களோ பொதுமக்க ளோ போராட்டக்களத்தில் இறங்கத் தேவையில்லை. மாணவர்கள், இளைஞர்கள் போராட்டக்களத்தில்இறங்கி னால் அவர்களைக் கட்டுப் படுத்துவது கடினம் என்பதை யும் அரசாங்கம் உணர வேண்டும். மாணவர் கள் போராட, படை யினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய இதனால் ஏற்படும் இழப்புகள் பேச்சுவார்த்தை களை சீர் குலைத்து மீண்டும் யுத்தத்துக்கு வழிவகுத்து விடும் 'என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும்.

எனவே, பருத்தித்துறை சம் பவம் போல் இன்னொரு சம்பவம் நடக்காமல் இருக்க அரசு தான் ஏற்றுக் கொண்ட நடவடிக்கைகளை உடன்முழு மையாக நடைமுறைப் படுத் தும் படி வேண்டுகின்றோம்.

நேற்று முன்தினம் பருத் தித்துறையில்மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தில் படையினர் மாறாக நடந்தமை குறித்து ஈ.பி.ஆர். எல்.எவ் செயலா ளர் நாயகம் கே.பிரேமச்சந் திரன் விடுத்துள்ள கண்டனக் குறிப்பில் இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

மாணவர்களே! இளைஞர் களே! போராட்டம் முக்கிய மானது. எங்கள் மண்ணில் எங்கள் வீதியில் நாம்நடமாட தடை போடுவதென்பது முழு மையான ஆக்கிரமிப்பாள னின் பண்பு. அதற்கெதிராக போராடுவது ஒவ்வொரு தமி ழனின் கடமை

ஆனால் பேச்சுவார்த் தைக்கு முக்கியம் கொடுத்து, சமாதானத்துக்கு முக்கியத் துவம் கொடுத்து, இவற்றை குழப்பாத வகையில் எமது போராட்டம் அமைய வேண்டும் இன்னுமொரு யுத் தத்திற்கான சந்தர்ப்பத்தை நாம் எதிரிக்கு ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது என்பதை தயவு செய்து ஆழமாக உணர்ந்து கொள்ளுங்கள். பேச்சுவார்த்தையை குழப்பும் சக்திகள் இராணுவத்திலும் இருக்கலாம், பொலிசிலும் இருக்கலாம். எனவே எமது போராட்டம் என்பது எந்த வகையிலும் வன்முறை அற்ற தாக இருக்கவேண்டு என்பது இன்றைய காலத்தின் தேவை இவற்றைப் புரிந்துகொள்வீர் கள் என நம்புகிறோம் என் றுள்ளது. (உ)

## தனியார்மயமாக்கல் குறித்த பொ.ஐ.மு.வின் நிலைப்பாடு திங்களன்று வெளியானது

(கொழும்பு)

அரச நிறுவனங்களை தனி யார்மயப்படுத்துவது சம்பந்த மாக பொதுஜன ஐக்கிய முன் னணியின் நிலைப்பாடு உத்தி யோக பூர்வமாக நேற்று முன்தினம் வெளியிடப்பட் டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன் னணியின் பொதுச் செயலா ளர் டி.எம்.ஜெரட்ண எதிர்க் கட்சித்தலைவரின் அலுவலகத் தில் நேற்றுக்காலை நடை பெற்றசெய்தியாளர் மாநாட் டிலே தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்;

14 துறைகளைச்சேர்ந்த அரச நிறுவனங்கள் எக்கார ணம் கொண்டும் தனியார் மயப்படுத்தக் கூடாது என பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

இலங்கை வங்கி; காப்புறு திக்கூட்டுத்தாபனங்கள், அரச போக்குவரத்துச் சேவைகள் கல்வி, சுகாதாரம், துறைமுகங் கள், தபால்சேவை என்பன இவற்றுள் அடங்கும். (உ-8)

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமையாய் வாழ்க

ஓர் ஊரில் அண்ணன், தம்பி இருவர் இருந்தார்கள். அவர்களின் அப்பா கடைசியாக அவர்களுக்கென விட்டு விட்டுப்போன சொத்து ஒரு மாமரம், ஒரேஒரு பசுமாடு, ஒருபோர்வை. அவ்வளவுதான்: இந்தமூன்றையும் அவர்களிருவரும் ஆளுக்குப் பாதியாகப் பிரிக்கவேண்டும். பாகப்பிரிவினை! எப்படிப் பிரிப்பது? எப்படிப் பங்கு போட்டுக்கொள்வது? எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்குப் பாதியாகவா எடுத்துக்கொள்ள முடியும்?

அண்ணன்காரன் ஒருமக்கு. என்னசொன்னாலும் தலையாட்டிக்கொண்டு போகிறவன். தம்பிக்காரன் கொஞ்சம் புத்திசாலி இருந்தாலும் அந்தப் புத்திசாலித்தனத்தைத் தப்பாக உபயோகப்படுத்தக்கூடியவன். அந்தத் தம்பிக்காரன் அண்ணனிடம் சொன்னான் அண்ணாச்சி! நமது அப்பா நமக்காக விட்டு விட்டுப்போனசொத்தை நாம் இரண்டுபேரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக்கொள்ளலாம். இதற்காக ஊரைக் கூட்டிப் பஞ்சாயத்து வைக்க வேண்டிய அவசியம்இல்லை' என்றான். 'சரிதம்பி... அப்படியென்றால் நீயே அதைப் பங்குபோடு' என்றான் அண்ணன் தம்பிக்காரன்யோசனை பண்ணினான் அப்புறம் சொன்னான்.

'அண்ணாச்சி... நீங்கள் வயதில் மூத்தவர்... அதனால் அந்தமூன்று விஷயத்திலும் உங்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கவேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதிலே அடிப் பாகம்தான் வலுவானது. அதனால் அந்தமரத்தில் பாதிக்குக்கீழுள்ள தெல்லாம் அதாவது வேர்உட்பட அடிப் பாகம்முழுவதும் உங்களுக்கு! மேல்பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருக்கிறது. அதுஎனக்கு இருக்கட்டும்! அடுத்தபடியாக உள்ள அந்தப் பசுமாடு! எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் அதனாலே அந்தமாட்டில் தலைப் பாகம் உங்களுக்கு... பின்பக்கம் எனக்கு இருந்துவிட்டுப் போகட்டும்! அடுத்தது அந்தப் போர்வை. அதைப்பகல் முழுவதும் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். இரவுமுழுவதும் நான் வைத்துக்கொள்கின்றேன்.' என்றான் தம்பி. விபரம் புரியாமல்சரிஎன்று ஒத்துக்கொண்டான் அண்ணன். அதன் பின்னர் என்ன ஆனது தெரியுமா? அண்ணன் அந்த மரத்துக்கு உரம்வைக்கிறான். தண்ணீர் பாய்ச்சுகிறான்... தம்பிஜாலியாக மேலே உள்ள பழங்களைப் பறித்துக்கொண்டிருக்கிறான். அண்ணன் பசுமாட்டுக்கு முன் பக்கம் தீனி வைக்கிறான். புல்லுப்போடுகிறான் தண்ணீர் வைக்கிறான் தம்பி பின்பக்கம்தன்பாட்டில் பால் கறந்து காப்பி போட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை மடித்து வைத்திருக்கிறான். தம்பிக்காரன் ஜாலியாக அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்குகின்றான்.

இப்படியே நடந்து கொண்டிருக்கிறது. இதைப் பக்கத்து வீட்டுக்காரன் ஒரு நாள் கவனித்தான். நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண்டான். உடனே அண்ணன் காரனை இரகசியமாகத் தன் வீட்டுக்கு ஒருநாள் அழைத்துக் கொண்டு வந்து, சில போதனைகளைச் செய்தான். இனிமேல் இப்படி நடந்து கொள்!, என்று யோசனை சொன்னான். அவனும் சரியென்று சொல்லித் தலையாட்டி விட்டுப் போனான். அதன் பின்னர் என்ன ஆனதுதெரியுமா? அண்ணன் காரன் மரத்துக்கு உரம் வைப்பது, தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி விழிக்க ஆரம்பித்தான்: ஒரு கோடரியை எடுத்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான் அண்ணன், தம்பி பதறிப் போய் ''என்னண்ணே! இப்படிப் பண்ணுகிறீர்களே என்றான்'' என் பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் உன்பாகத்திலேயா நான் வெட்டுகிறேன்?'' என்றான். அவன்.

மாட்டுக்குத்தீனிவைப்பதையும், தண்ணீர்வைப்பதையும் நிறுத்தினான். தம்பி பால் கறந்து காப்பிபோட முடியவில்லை. தவித்துப் போய்விட்டான். அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் காரன் வைத்திருந்து இரவு நேரம் வருவதற்குள் அதைத் தண்ணீரிலே நனைத்துத் தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ளமுடியவில்லை. அதன் பின் அண்ணனிடம் சமரசம் பண்ணிவிட்டு நியாயமாக நடக்க ஆரம்பித்து விட்டானாம் அந்தத் தம்பி. ஒற்றுமையாக வாழ்வதிலும்ஒருஒழுங்கு முறை வேண்டும் என்பது இதிலிருந்து புரிகிறது அல்லவா? ஒரு ஆள் சொன்னான். 'இது மாதிரி சார். என்னுடைய எதிர் வீட்டுக் காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என் கூடப்பிறந்த தம்பியாக நினைத்துப் பழகினேன். தம்பி என்றே கூப்பிடுவேன். அதுதான் இப்போது தப்பாகப்போய்விட்டது' என்றான். ஏன்? என்று கேட்டேன். அவனும் அதை நிஜமென்றே நினைத்துக் கொண்டு... இப்போது என் சொத்தில் பாதி பங்கு கேட்கிறான் சார்! என்றான் மிகுந்த வேதனையோடு!. □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பத்து இலட்சம் பனம் விதைகள் நடுகைத் திட்டம் இம்மாதம் அமுல்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 10 இலட்சம் பனம் விதைகள் நடுகைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்தார்.

இப்பணிக்கென ஒரு மில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்த வகையில் கிளிநொச்சியில் 2 இலட்சம் பனை விதைகளும், ஆனையிறவில் 2 இலட்சம் பனை விதைகளும், யாழ். குடாநாட்டில் 3 இலட்சம் பனை விதைகளும், மன்னாரில் 3 இலட்சம் பனை விதைகளும் நாட்டப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கென நல்லின பனம் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு வருவதுடன், நடுகைத் திட்டத்தினை நல்ல முறையில் தொடர்ந்தும் பராமரிக்கவுள்ளதாகவும் பொ. சிவபாதம் மேலும் தெரிவித்தார். (உ-6)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று வாஸஸ்பதி ரஜீந்திரனின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் நடைபெறவுள்ளது.

## நுளம்புக் கட்டுப்பாடு

வலிமேற்கு பிரதேச சபையின் நுளம்புக் கட்டுப்பாடு, டெங்கு ஒழிப்பு நிகழ்வுகள் இவ்வாரம் வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களில் இடம்பெற்று வருகின்றன. (உ-232)

## இசைப் பேருரை

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் மகாபாரத தொடர் இசைப் பேருரையில் இன்று 'கிருஷ்ணன் தூது' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

## தெய்வீக நிகழ்ச்சி

வட பிரதேச இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர் உற்சவகாலத்தையொட்டி 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சியில் இன்று 'முருகநாம பஜனை' என்னும் தலைப்பில் இந்துப் பேரவையின் பஜனை இடம்பெறவுள்ளது.

## தெய்வீகப் பேருரை

நல்லூர் சைவமகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் உத்சவ காலத்தையொட்டி நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று 'திருநாளைப் போவார்' என்னும் தலைப்பில் காரை கு. சிவராஜ சர்மா செற்பொழிவாற்றவுளளார்.

## சிறப்புக் கலையரங்கம்

புலிகளின் குரல் நிறுவனத்தினால் தியாகி திலீபன், கேணல் கிட்டு ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் சிறப்புக் கலையரங்கத்தில் இன்று, இரவு 6.30 மணி முதல் ஆர். வசந்தனின் புல்லாங்குழல் இசைக் கச்சேரியும், முல்லைச் சகோதரிகளின் பாடலும் இடம்பெறவுள்ளது.

## கலை இசை நிகழ்ச்சிகள்

நல்லைக்கந்தன் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் இடம் பெறும் கலை இசை நிகழ்ச்சிகளில் குமாரவடிவேல் குருபரனின் பண்ணிசைக் கச்சேரி, ஸ்ரீ. தர்ஷனன், எஸ். ஜெயகௌரி, சங்கீத பூஷணம் வி. சிவஞானசேகரம் ஆகியோரின் இசைக்கச்சேரிகள், மற்றும் இராசையா ஸ்ரீதரனின் வில்லுப்பாட்டு ஆகியன நடைபெறவுள்ளன. (உ-3)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் உற்சவம் நாளை ஆரம்பம்

(மந்திகை)

வரலாற்றுச் சிறப்புமிக்க துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறவுள்ளன.

14ஆம் திகதி சனிக்கிழமை வெண்ணெய்த் திருவிழாவும், மறுநாள் மஹாகம்சன் போரும், 20 ஆம் திகதிவெள்ளிக்கிழமைதேர்த்திருவிழாவும் தொடர்ந்துசமுத்திர தீர்த்த கேணித்தீர்த்த திருவிழாக்களும்நடைபெறவுள்ளன (உ)

## தென்மராட்சியில் 2 ஆயிரத்து 35 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

(தென்மராட்சி)

கடந்த மூன்று மாத காலத்தில் வன்னியில் இருந்து தென்மராட்சிக்கு 2 ஆயிரத்து 35 குடும்பங்கள் மீளக்குடியமர்தல்பொருட்டு வருகை தந்துள்ளன.

தென்மராட்சி பிரதேசசெயலகப்புள்ளி விபரங்கள் மூலம் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இவ்விதம் வந்துள்ள குடும்பங்களுக்கு பிரதேச செயலகம் அவ்வப்பகுதி கிராமசேவையாளர்கள் மூலம் புதிய நிவாரண அட்டைகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## குடாநாட்டில் பனாட்டு விலை மிகவும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்பனாட்டின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

பனம்பழம் விழுகின்ற பருவகாலமாகையால் பெருமளவு பனாட்டுசந்தைக்கு வருகின்ற காரணத்தினாலேயே விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

அண்மைக்காலம்வரை கிலோ500 ரூபாவாக விற்பனையான பனாட்டுதற்போது தனியார் கடைகளில் 250 ரூபாவாக விற்பனையாவதைஅவதானிக்கமுடிகின்றது.

இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையங்களில் இதை விடவும் குறைந்த விலையில் தென்பகுதி உல்லாசப்பயணிகள் ஆர்வமுடன் பனாட்டைவாங்கிச் செல்கின்றனர் (உ)

## தடைநீக்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கூடாதென்று கோரி, ஜே. வி. பியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், தடைநீக்கப் படக் கூடாதென்பதை வலியுறுத்தியும்இவ் ஆர்பாட்ட ஊர்வலம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் ஆரம்பமாகி காலிமுகத்திடல் வரை சென்றது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் எதிர்ப்புக் கூட்டமும் இடம்பெற்றது. இதில் ஜே வி.பி. பிரமுகர்கள் பலர் உரையாற்றினர். (இ)

## இன்னிசைக் கோஷ்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு வருடம் தோறும் தீர்த்தத் திருவிழா அன்று நடத்தி வரும் தேவாரப் பண் இன்னிசைக்கோஷ்டி காலை 7.00 மணிக்கு மன்ற தேவாரப் பாடசாலை ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் இருந்து புறப்பட்டு குமார வீதி, பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தை அடைந்து வீதி வலம் வந்து தேரடியில் நிறைவு பெறும். (உ)

## குளங்களிலிருந்து துர்நாற்றம்

(கொழும்புத்துறை)

கடும் வெப்பம் காரணமாக ஈச்சமோட்டையில் அமைந்துள்ள மறுவகுளம், வண்ணாரக் குளம் ஆகியனவற்றில் துர்நாற்றம் வீசுகின்றன. (உ-262)

## 806 குடும்பங்கள் மீள் குடியமர்வு

(தென்மராட்சி)

பளை பிரதேச செயலர் பிரிவில் ஆகஸ்ட் மாதம் வரை 806 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 12 பேர் மீளவும் குடியேறியுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு யு. என். எச். சீ. ஆர் நிறுவனம் வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்கி வருகின்றது. (உ-77

## கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு ஜனாதிபதி மீண்டும் உத்தரவாதம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை மௌலவிமார் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து தான் நடவடிக்கை எடுக்கப் போவதாக தேசியஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பிடமும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தது தெரிந்ததே. (உ-8)

# தமிழ் மாநில அரசு மீண்டுமோர் சதிவலை

# கலைஞர் கருணாநிதியைக் கைதுசெய்ய

(புதுடில்லி)

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதியை தமிழக மாநில அரசு கோவாவில் வைத்து கைது செய்யகூடிய வாய்ப்பு உள்ளதாக இந்திய புலனாய்வுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதற்கென தமிழக குற்றப் புலனாய்வு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி முகமது அலி தலைமையிலான குழுவுக்கு விமானம் ஒன்றும்' தொடர் ஊர்திகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

சென்னை மேம்பால ஊழல் குற்றச் சாட்டின்பேரில்கடந்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி கலைஞர் கருணாநிதியையும், அவரது மகன் ஸ்ராலினையும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின்பேரில் அநாகரிகமான முறையில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் பின்னர் விடுவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இவ்வழக்கு தொடர்பான மேலும் பல குற்றச் சாட்டுக்களின் பேரிலோ அல்லது சந்தனக்கடத்தல் வீரப்பனுடன் தொடர்பிருப்பதாக அண்மையில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வெளியிட்ட குற்றச் சாட்டுக்களின் அடிப்படையிலோ இவர் மீண்டும் கைது செய்யப்படலாம் எனவும் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் வீரப்பனை சந்திக்க தான் சென்றதாக கூறும் ஜெயலலிதா பின்லேடனுடனும் மதிய உணவு சாப்பிட்டதாக கூறுவார் என கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளதுடன், தான் தொல்காப்பியத்துக்கு இலகு நடையில் உரைஎழுதுவதற்காகவே கோவா சென்றதாக தனது காரணத்தை வலியுறுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## அல்கெய்டா சூடானுக்கு தங்கம் கடத்துகிறது

### அமெ.பத்திரிகை தகவல்

(கார்டும்)

அல்கெய்டா இயக்கமும் தலிபான் இராணுவத்தினரும் இணைந்து பெருமளவு தங்கத்தினை சூடானுக்கு கப்பல்கள் மூலம் அனுப்பி வைத்துள்ளதாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்கா, பாகிஸ்தான் வட்டாரங்களை ஆதாரம் காட்டி வாஷிங்டன்போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் கராச்சி நகரிலிருந்து ஈரான், ஐக்கிய அரபு எமிறேற் ஆகிய நாடுகளுக்கு இத்தங்கங்கள் கப்பல்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றின் மூலம் சூடானின் தலைநகர் கார்டுமுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சூடானுக்கு அனுப்பப்பட்ட தங்கத்தின் பெறுமதி பற்றிய விபரங்கள் வெளிவரவில்லை.

அல்கெய்டா இயக்கத்தின் தலைவரான ஒஸாமா பின்லேடன் 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை சூடானில் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ.8)

## ஹொங்கொங் வங்கிகளில் அல்கெய்டா பெருமளவுபணம்வைப்பு

(ஹொங்கொங்)

அல்கெய்டா அமைப்பு ஹொங்கொங் வங்கிகளில் ஏராளமான பணத்தை வைப்பில் இட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஹொங்கொங் அதிகாரிகள் உஷாரடைந்துள்ளனர்.

மேற்படி அறிக்கையின் பிரதி தமக்கு கிடைத்தபின்பு அது பற்றி ஆராய இருப்பதாகவும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீர்மானிக்கவுள்ளதாகவும் ஹொங்கொங் அறிவித்துள்ளது.

சர்வதேச சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் நாம் பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுவது எமது கடமையாகுமென அந்நாட்டின் பாதுகாப்புப் பிரிவு இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளது. (உ-3)

## சக்தி கோவிலில் தீ விபத்து 05 குழந்தைகள் மரணம்

(புதுடில்லி)

புதுடில்லி திலக்நகர்விஷ்ணு கார்டினில் உள்ள சக்திகோவிலில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தின் போது-2 சிறுமிகள் உட்பட 5 குழந்தைகள உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ் அனர்த்தத்திற்கான காரணம் குறித்து ஆலய வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

சக்தி கோயிலிற்குவிரைந்த தீயணைப்பு படையினர்' தீயினை முற்றுமுழுதாக அணைத்து விட்டதாகதெரிய வந்துள்ளது. (க-08)

## பிரார்த்தனை

(வாஷிங்டன்)

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்க வர்த்தக மையம், பாதுகாப்பு தலைமையகம் மீதும் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் பலியானவர்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக நான்கு நாள்பிரார்த்தனை ஒன்றை அங்குள்ள முஸ்லிம்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (உ-3)

## தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கற்பிப்பதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த சகலரையும் தவறாது பரீட்சைகுத்தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## பூசகர் செல்ல அனுமதி

(திருநெல்வேலி)

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள சிவன் கோவில்பூசகர் உள்ளே செல்ல நேற்று 524 படைத்தரப்பு அனுமதியளித்தது.

கடந்த திங்கள்இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து மேற்படி வீதி மூடப்பட்டதால் அப்பகுதிக்குள் சுமார்20 பேர் அகப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே ஆலயப் பூசைக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இதேவேளை, பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணிக்கு தொழிலாளர்கள் செல்ல படையினர்அனுமதிக்கப்படாததால்கப்பல் காங்கேசன்துறைக்குத் திரும்பிச் சென்றது. (உ-43)

## பட்டப்பகலில் பல லட்சம் சொத்து திருட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைஆலோலை ஒழுங்கையில் உள்ளவீடொன்றில் பட்டப்பகலில் பல லட்ச ரூபா பெறுமதியானசொத்துக்கள் களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் வேளை வீட்டார் அயல் வீட்டிற்குச் சென்ற வேளை வீட்டை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெரும் தொகைப் பணம் மற்றும்நகைகள்,இலத்திரனியல் பொருட்கள் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுத் தொடர்பாக வீட்டு உரிமையாளரான திருமதி தி.செல்வராசா மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-216)

## ஈராக்மீது தாக்குதல் நடத்த அமெ.தரப்பு கடும்முயற்சி

### அவுஸ் முன்னாள் இராணுவமேஜர் தெரிவிப்பு

(சிட்னி)

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் அதுவியட்நாமில்கற்ற பாடத்தை சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவின் முன்னாள் இராணுவ மேஜர்ஜெனரல் அலான்ஸ்டிட்டன் த சிட்ணிமோர்ணிங் ஹெரால்ட் என்றபத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதலுக்கு அவுஸ்திரேலியா ஆதரவுவழங்குவது தவறானது ஆகும் ஐக்கிய நாடுகளின் சபையின்ஆதரவு இல்லாது ஈராக் மீதானதாக்குதலை நடத்த அமெரிக்கா யோசித்து வருகின்றது இதனை அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ரும் வெளியுறவுஅமைச்சர்அலெக்ஸ் சாண்டர் டௌனரும் ஆதரித்து வருகின்றனர்.

ஐ.நாவின் ஆதரவின்றிஅமெரிக்கா,வியட்நாமில் மேற்கொண்ட தாக்குதலில் 500 அவுஸ்திரேலிய வீரர்கள் பலியாகியதுடன் 50ஆயிரம் அமெரிக்கர்களும் 10இலட்சத்திற்கு அதிகமான வியட்நாம் மக்களும் கொல்லப்பட்டனர் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஈராக் மீது தாக்குதல் நடத்ததிட்டமிட்டிருக்கும் அமெரிக்கா அதனை தவிர்க்க வேண்டும் என முஸ்லிம்நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் வலியுறுத்தி வருவது தெரிந்ததே. (க-8)

## வதிவிட வசதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில், யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வதிவிட வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த காரைநகர், மருதபுரம், கல்லந்தாழ்வு, சயூரினா கடற்கரை, பிட்டி எலல, நாரந்தனை. பருத்தியடைப்பு ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (உ-75)

பத்திரிகையாளர் நிமலராஜன்

## படுகொலை விசாரணை 17 ம் திகதிக்குஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றில் யாழ் மாவட்ட. நீதிபதி இ.த.விக்கினராஜா முன்னிலையில் இடம் பெற்றது.

இவ்வழக்கை ஆராய்ந்து வரும் குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி ரஞ்சித் டி.சில்வா உடனடியாக மன்றில் ஆஜராகி விசாரணை முடிவுகளை தெரிவிக்க வேண்டும் என்று நீதிபதிஉத்தரவிட்டார்.

இதேவேளை இவ்வழக்கு தொடர்பான சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 17ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படிநீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-6)

### அத்துருகிரிய ஆயுதக் களஞ்சிய விவகாரம்

## பலகல்ல உட்பட 8 படையினர்க்கு கண்டிபிரதமநீதிமன்றுஅழைப்பாணை

(சொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சியம் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல உட்பட 8 இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக கண்டி பிரதம நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அத்துருகிரிய ஆயுதக் களஞ்சியத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அதி நவீனத்துவம்மிக்க ஆயுதங்கள் மற்றும் ஆயுதங்கள் தொடர்பாகவே கண்டி பொலிஸார் இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

தாக்கல் செய்யப்பட்ட மனுவில் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைப் பாதுகாப்பற்ற முறையில் கையாளுதல், களஞ்சியப்படுத்தல், சைனட் வில்லைகளை பதுக்கி வைத்திருத்தல் போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கண்டிப் பிரதம நீதிமன்ற நீதிவான் மனுவில்குறிப்பிடப்பட்ட அனைவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆஜராகும்படி அழைப்பாணை விடுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இவ் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையால் தடை செய்யப்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கண்டிப் பொலிஸ் அத்தியட்சகர் குணசீலி உடுகம்பொல தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

தூங்காமைகல்விதுணிவுடமை
இம் மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு:

குறள்

வலம்புரி

## நேற்றைய இருநிகழ்வு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஆதரவைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி பிரதமரிடம் கூறியிருந்தாலும், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு ஜனாதிபதி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளின் தடை நீக்கப்பட்டாலும் அதனைத் தடுத்து நிறுத்தும் சட்ட அதிகாரம் தனக்குண்டென்றும் ஜனாதிபதி கூறியிருப்பது சமாதானத்தின் மீதான நம்பிக்கையில் கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் புலிகள் மீதான தடை நீக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியாக இருப்பதும் இங்கு நோக்குதற்குரியது. விடுதலைப் புலிகளுடன் அரசுசமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு ஜனாதிபதியின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை நேற்றைய பிரதமரின் சந்திப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

சமாதான முயற்சிக்கு தனது ஆதரவு இருக்குமென அடிக்கடி கூறிக்கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகள் மீதான தடையில் இறுக்கமான கொள்கையைக் கொண்டிருப்பது சமாதானத்தின் கிடைப்பனவுக்குப் பெரும் பாதிப்பாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டாலும், புலிகள்மீதான தடை நீக்கத்தை ஜனாதிபதி தடுக்க முற்படுவாராயின் அஃது அவர் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இது ஒரு புறமிருக்க நேற்றைய தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சு நடத்தியிருப்பதும் சமாதான முயற்சியில் நேற்று இடம்பெற்ற இரு முக்கிய நிகழ்வுகளாகும்.

இதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் சந்திப்பு அவரை சமாதானப் பேச்சில் அரச-முஸ்லிம் பிரதிநிதியாக புலிகள் ஏற்பதற்கு வழிகோலியுள்ளது.

# பூஜை வழிபாடுகளில் முன்னோடியாகத் திகழும் நல்லூரின் சிறப்புக்கள் சொல்லிலடங்காதவை

சிவபூமியாகிய இலங்கையில் மிகப் புராதன காலத்திலிருந்தே சைவசமயம் நிலவி வந்தது. இராவணன் ஒருசிவபக்தனாக இருந்து வந்துள்ளான். பழமையான பஞ்சஈச்சரங்கள் நாலுதிக்கிலும்காணப்பட்டன. காலப் போக்கில் பௌதத சமயம் இலங்கைக்கு வந்தாலும் சைவசமயம் தன்னாதிக்கத்துடனேயே வீறு நடைபோட்டு வந்தது.

கந்தபுராணம் இலங்கைக்கு வந்தமையும், கந்தபுராண படனமரபு சிறப்பாகநடந்தமையும் இலங்கையில் முருக வழிபாட்டை மிகச்சிறப்பாக வளர்ச்சியடையச் செய்தன. பார்க்குமிடமெங்கும் முருகன் கோயில்கள் எனப்பல முருகனாலயங்கள் தோற்றம் பெற்றன. இந்தவகையிலேயே நல்லைக் கந்தனாலயம் மன்னர்களால் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது.

### பூஜை வழிபாடுகள்

நல்லூர் என்றாலேமுருகன் கோவிலை நினைக்கக் கூடிய வகையில் தேசத்துக் கோயில்கள் எனப்போற்றப்படும் கோயில்களில் நல்லூர்க்கந்த சுவாமிகோயிலும்ஒன்றாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பணி செய்தஇடமும் யோகர்சுவாமிகள், செல்லப்பாச்சுவாமிகள் எனச் சீடர்கள்நடமாடிஅருள் சொரிந்த இடமும் இலங்கைக்கே தனிஆதீனமாகவிளங்கும் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆரம்பித்த இடமும் நல்லைக்கந்தன் ஆலயச் சூழலாகும்.

வேத ஆகமங்களில் கூறப்பட்ட ஒழுங்கு முறைக்கேற்ப, நேரந்தவறாத பூஜை நல்லூரின் அருட்கொடைக்கு ஒரு காரணமாகும். நாட்டில் எத்தனை அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் அதிகாலை 4.30 மணிக்கு பள்ளியறைப் பூஜையும், 5 மணிக்கு உதயக்காலப் பூஜையும் சிறப்பாக நிறைவேறிவருகின்றன. நித்தமும் வந்து வழிபடும் அடியவர் கூட்டம் 4.00 மணிக்கே வந்துவிடுவார்கள். இதே போல் பள்ளியறைப் பூஜை சிறப்பாக நடைபெறும். ஆலயங்களில் நல்லூர் மிகச்சிறப்பானதாகும்.

உற்சவகாலங்களிலோ அதிகாலையில் குளிர்மையான நல்வேளையில் வழிபடுவோர் ஒருபகுதியினர். அதிகாலையில் நித்திரைவிட்டெழ முடியாத வயோதிபர், நோயாளர், குழந்தைகள்வழிபடவசதியாக காலை 7.00 மணிக்கு சந்தானகோபாலர் உற்சவம், மகாவல்லி கஜவல்லி உற்சவம், பழனியாண்டவர் உற்சவம், தேர், தீர்த்தம் போன்றவை நடைபெறுகின்றன.

சைவப் புலவர்

**செ. கந்தசத்தியதாசன்**

B A (Hons)

விரதமிருக்கும்அடியவர்கள் பெண்கள் தாம தம்வீட்டுவேலைகள், சமையல்களை முடித்துவிட்டு10.00மணிக்கு வந்தால் 12 30 மணிக்கு வீட்டேபோய் மதியபோசனம் அருந்தலாம். மாலைப் பூஜையும் குறித்த நேரத்திற்கே நடைபெறுவதால் பல அடியவர்கள் பூஜைநடைபெறும் நேரத்திற்கே வந்து குவிவார்கள். உண்மையில் கொடித்தம்பப் பூஜை, வசந்தமண்டபப்பூஜை மிகத்தொலைவிலிருந்தும் வழிபடக்கூடியவகையில் வசந்தமண்டபம் அமைந்தது சிறப்பிற்குரியது. இதே போல் வேறுஎங்கும்காணமுடியாத வகையில் பள்ளியறைப் பூஜை மஞ்சத்தில்முருகப்பெருமான் பவனி அடியவர்களின் திருப்புகழ் பஜனை பூஜை, ஊஞ்சலில் ஆசீர்வாதம், வாழ்த்து என்பன அடியவர்களின் மனதில் தெய்வீக உணர்வையும், மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் சாந்தியையும் தருகின்றன.

### விஞ்ஞாபனம் அவசியமில்லை

நிறைவாக கதிர்காமக்கந்தனை ஞாபகப்படுத்தும்வகையில் அழகிய சண்முகப்பெருமான் மகாவல்லி கஜவல்லியுடன் எழுந்தருளியிருக்கும் திரைச்சிலைக்கு, ஆறு அந்தணர்கள் திருநீற்றுத் தட்டத்தில் கற்பூரதீபம் காட்டுவதும் அடியாருக்கு சுடச்சுட வழங்குவதும் அடியாருள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகின்றதாகும்.

மேலும் மகோற்சவ காலத்தில் எவ்வருடமாயினும் குறித்த நேரத்திலேயே கொடியேற்று, தேர் என எல்லா உற்சவங்களும் நடைபெறும். மகோற்சவ விஞ்ஞாபனம் தேவையில்லை. எல்லோருக்கும் அவை நன்கு விளங்கிக் கொள்ளும். உதாரணமாக மாலை 5.30 மணிக்கு பெருமான் வெளிவீதியில் காட்சி தருவான் 6:00 மணிக்கு உள்ளே செல்லுவான் என்பதை அறிந்த அடியவர் குறித்த நேர இடைவெளியில் வந்து வழிபட்டுச் செல்வர்.

### ஏழைக்கும் ஏற்ற அர்ச்சனை

அர்ச்சனை ரிக்கற் ஒரு ரூபா மட்டுமே, ஏழை கூட முருகனுக்கு அர்ச்சனையை செய்யும் வகையில் அமைந்தது. பல பெரியார்களாலும், வெளிநாட்டவர்களாலும் போற்றப்படுகிறது. ஒருவர் அர்ச்சனை செய்தாலும் பஞ்சாராத்தி தீபம் காண்பிக்கப்படுதல் தனிச்சிறப்பானதாகும்.

மேலும் நல்லைக்கே சிறப்பாக உற்சவகாலங்களில் வேறு வேறு நிறுவனங்கள் அடியார்க்காக இசை நிகழ்வுகளையும், சொற்பொழிவுகளையும் ஆங்காங்கே நடத்தி வருவது மிகச் சிறப்பைத் தருகின்றது.

இவற்றுக்கும்மேலாக யாழ். மாநகர சபை ஆலய உற்சவத்தில் செய்யும் சுகாதார சேவை, ஒழுங்கமைப்புசேவை மட்டுமன்றி, நல்லைக்குமரன் என்ற ஓர் மலரை வெளியிட்டு வருவதும் நல்லைக்கே தனித்துவமானது.

இவை மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலே இருக்கின்ற பத்திரிகைகள் தினமும் நல்லையின் செய்திகளைப் பிரசுரிப்பதும் பல இளம் நெஞ்சங்களின்கவிதைகளைப் பிரசுரிப்பதும் தனித்துவமானது. அதே போல் இன்று வெளிவரும் சிறப்பிதழ் யாரும் சொல்லாமலேயே நடக்கின்றது. இலங்கை வானொலி வர்சேட உற்சவங்களை யாழ் சேவை முதல் தேசிய சேவை வரை நேரடியஞ்சல் செய்வதும் நல்லைக்குத் தனித்துவமானதாகும்.

பல தொண்டர் அமைப்புக்கள் நல்லைக்கந்தனிடம் வரும் அடியவருக்கு சேவை செய்வதும் சிறப்பானதாகும்.

இவ்வாறு நல்லையின் சிறப்புக்களை பேச்சில், எழுத்தில் அடக்கிவிட முடியாது. முருகனின்ஆறுமுகம் ஆறெழுத்து மந்திரம் போல ஆறு மணிக் கோபுரங்களும் ஆறு மணிகளும்சிறப்புற்சவங்களில் ஆறு மணிகள ஒருமித்தே நாதம் எழுப்புவது மனித எல்லைக்கு அப்பாற்பட்ட தெய்வீக உணர்வை நன்கு அறிய வைக்கின்றது.

உண்மையில் தேசத்துக் கோயிலாக விளங்கும் இந்த நல்லைக்கந்தனின்ஆலயத்தில் நடைபெறும் நல்லமசங்களை செவிமடுத்து ஏனைய ஆலயங்களும் அவ் வழியில் நடந்து கொண்டால் அருள் பெருகுமல்லவா?

## சாயி அருளமுதம்



ஏதோ வரப் போகும் காலத்திலல்ல -இந்த உடல் உங்களுடன், உங்கள் முன்னால் இருக்கும் காலத்திலேயே சத்யஸாயியின் பெயர் உலகம் முழுவதும் எதிரொலிப்பதை நீங்கள் கேட்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் உலக மக்கள் எல்லோருடைய நன்மைக்காக வேதங்களிற் கூறப்பட்டுள்ளதர்மமாகிய 'ஸநாதன தர்மம்' அதனுடைய உண்மையானதும் இயற்கையானதுமான நிலைக்குமீண்டும் வருவதையும் நீங்கள்காணக் கூடியதாக இருக்கும். எனது சக்தியையும் சாமர்த்தியத்தையும் வெளிக்காட்டி மக்களை என்பால் ஈர்ப்பது மட்டுமன்றி வேதீய தர்மத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதே எனது சங்கல்பமாகும். இது ஒரு பிரமமதத்துவம் (மாயத்தோற்றம்) அன்று இந்த அற்புத நிகழ்வு உண்மையை நிலை நிறுத்தி பொய்மையை ஒழிக்கும். இந்த வெற்றி உங்களை ஆனந்தத்தில் திளைக்கச் செய்யும். இதுவே ஸாயி சங்கல்பமாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## மீளக் குடியமர்ந்தோர்க்கு வீட்டு உபகரணங்கள்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான முதற் கட்ட வீட்டு உபகரணப் பொருட்கள் இன்று காலை 9.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

ஜே/130, ஜே/131, ஜே/132, ஜே/133, ஜே/134, ஜே/136 கிராம அலுவலர் பிரிவில் மீளக்கு குடியமர்ந்தமக்களை, தத்தம் கிராம அலுவலரிடம் பெயரை உறுதிப்படுத்தி பொருட்களைப் பெற்றுக் கொள்ள வருமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(உ-201)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

'செப்ரெம்பர் 11 க்குப் பின் உலகம்' என்னும் தலைப்பில் தோழர்கள் சி.கா.க செந்தில்வேல், நிஹால்டயஸ் ஆகியோரின் கருத்துரையும் கலந்துரையாடலும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## புதிய அதிபர் பதவியேற்பு

(கொழும்புத்துறை)

சென் பற்றிக்ஸ்கல்லூரியின் புதிய அதிபராக அருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் இன்று பதவியேற்கவுள்ளார்.

இதனையொட்டி காலை 9.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து 'மத்தியூஸ்' மண்டபத்தில் வரவேற்பு விருந்துபசாரமும் இடம்பெறவுள்ளது.

(உ-262)

## விபரங்கள் திரட்டல்

(தென்மராட்சி)

கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சேவை நிறுவனங்களினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் விபரங்கள தற்போது திரட்டப்பட்டுவருகின்றன.

(உ-77)

## நினைவுதினக் கூட்டம்

(தென்மராட்சி)

கம்யூனிஸ்ட் கட்சியின்மூத்த தலைவர்களுள் ஒருவரும முன்னாள் அதிபருமான அமரர் மு. கார்த்திகேயனின் 25வது வருட நினைவு தினக்கூட்டம் எதிர்வரும் 8ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை யாழ். சிற்றி கோலில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் க. நடராசா தலைமையில்நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இலக்கிய கர்த்தா தெனியான் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் எஸ். தணிகாசலம் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த கொ. சிவபாலன் போரூட்நிறுவனத்தைச் சேர்ந்த தனேந்திரராசா உட்பட வேறும் பலர் உரையாற்றவுள்ளனர்.

(உ-77)

# புலிகள் மீதான தடையை பாதுகாப்பு அமைச்சர் நீக்கலாம்

## விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைபபுலிகள் மீதான தடைநீக்க அறிவிததலுக்கு ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்காவின் கையொப்பம் தேவையில்லை எனவும பயங்கரவாத தடைச்சட்டத்தின் 27ம் பிரிவின்படி புலிகள் மீதான தடையை பாதுகாப்பு அமைச்சர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கலாம் என்றும் யாழ்மாவட்ட எம்.பியும், சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 1998ம் ஆண்டு அப்போது ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருந்தமையால் அவர் விடுதலைப்புலிகளை தடை செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கடற்படைத்தளபதியின் வீட்டை வீடியோ எடுத்தவர்களை விசாரிக்க விசாரணைக் குழு நியமிக்கப்படும்!

(கொழும்பு)

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியின்வீட்டை அனுமதி இன்றி வீடியோப்படம் பிடித்தமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கு விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைத்தளபதி தயாசந்தகிரி அண்மையில் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தபோது அவரது வீட்டைக் கடற்படை உத்தியோகஸ்தர்கள் வீடியோப்படம் பிடித்ததாக ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருந்தமையை அடுத்தே இவ்விசாரணைக் குழு நியமிக்கப்படவுள்ளது.

இன்னும் சில நாட்களில் நியமிக்கப்படவுள்ள இவ்விசாரணைக் குழுவுக்கு சிரேஷ்ட கடற்படை உத்தியோகஸ்தர் ஒருவர் தலைவராக நியமிக்கப்படவுள்ளார். (ம)

---

### ஜனாதிபதியின்...

கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு அவரையே தனது பிரதிநிதியாக ஜனாதிபதி அனுப்பிவைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### விடுதலைப்புலிகள்...

யிட்டிருந்தார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அரசு, புலிகள் சமாதானப்பேச்சு வார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு ஜனநாயக ரீதியான அமைப்பு என்ற அங்கீகாரத்தை வழங்கும் பொருட்டு சுமார் நான்கு வருடங்களின் பின் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பல் வேறுபட்ட கூக்குரல்களுக்கும் எதிர்ப்புப் போராட்டங்களுக்கும் மத்தியில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளமை அரசினதும் விடுதலைப்புலிகளினதும் சமாதான முயற்சிகளுக்கு உரமூட்டும் உந்துசக்தியாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளதுடன்,

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைக்கு சுமார் 10 தினங்களுக்கு முன்பதாக விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டமையையும் அவர்கள் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை தாய்லாந்துப்பேச்சு வார்த்தைக்கு முன் இம்மாதம் 5ந் திகதி புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கும் என வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறும் நல்லைக் கந்தனின் தேர் உற்சவத்தோடு விடுதலைப்புலிகளின் தடை நீக்கப்பட்டிருப்பது ஒளிமயமான எதிர்காலம் தமிழ் மக்களுக்கு உண்டு என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. (ம)

# யாழ். பல்கலைக்கழகத்தால் 5 பேருக்கு கௌரவப்பட்டம்

## அக்டோபர் 12இல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழாவில் ஐவருக்கு கௌரவப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

அக்டோபர் மாதம் 12ம் திகதி யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவின்போது காரைநகர் சிவன்கோவில் வைத்தீஸ வரக்குருக்கள் டாக்டர் இராமசசந்திரன், பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், பேராசிரியர் எஸ்.பாலகிருஸ்ணன், இளைப்பாறிய அதிபர் எஸ். சபாரத்தினம் ஆகிய ஐந்து பேருக்குமே கௌரவப்பட்டம் வழங்கப்படவுள்ளது.

(ம)

---

### பருத்தித்துறைச்...

தலைமையகத்திற்குள் ஊடுருவி தாக்குதலை நடத்தியுள்ளதுடன், அங்குள்ள உடைமைகளையும் அடித்துச் சேதப்படுத்தினார்கள். இந்தச் சம்பவத்தைக் கட்டுப்படுத்தவும், மேலும் இவ்வாறான சம்பவம் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்தவும், அனுமதியின்றி முகாமிற்குள் பிரவேசிப்பவர்களை வெளியேற்றுவதற்காகவும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டது.

இங்கு தனிப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொதுமக்கள் மீதும் மாணவர்கள் மீதும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படாமல் நாம் எடுக்கக் கூடியதும், செய்யக்கூடியதுமான வழிமுறை கண்ணீர்ப் புகைக்குண்டு வீசுவதே ஆகும். இதனை விட வேறு எதுவும் இல்லை என்பதைப் பொறுப்புடன் எடுத்துக்காட்டுகிறோம்.

இதுவே உண்மையான தகவல் என்ற போதிலும், உண்மைக்குமாறான செய்தியை பத்திரிகைகளில் பிரசுரித்து யாழ் குடாநாட்டு மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்களை உண்டுபண்ணுவது கவலைக்குரிய விடயமாகும்.

மக்கள் சரியானதும் உண்மையானதுமான செய்தியை அறிந்து கொள்ளும் வகையில் இச்செய்தி பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். என்றும் அச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

---

### பருத்தித்துறையில்...

(வயது 22) என்ற இளைஞன் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை படையினரால் மூடப்பட்டிருந்த சில வீதிகள் நேற்றுத் திறக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் இருந்த மக்கள் பலர் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிதை அவதானிக்கமுடிந்தது. (இ-23)

---

### புதிய பரி...

இதன் மூலம் சுமார் 1200 புதிய இணைப்புக்கள் விண்ணப்ப முன்னுரிமைப்படி வழங்கவுள்ளதாகவும் ரெலிகொம் நிறுவன முகாமையாளர் எஸ்.கனகசூரியர் தெரிவித்துள்ளார்.

11ந் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள இவ் ஆரம்பவைபவத்தில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடன் ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலவும் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை தற்போது யாழ்ப்பாணத்தில் ரெலிகொம் நிறுவனத்தினால் தொலைபேசி இணைப்புக்களுக்கு புதிய இலக்கம் வழங்கப்படவிருப்பதாகவும், இதன்படி ஏற்கனவே 021 என்ற இலக்கத்திற்குப் பதிலாக 222 என்ற இலக்கம் தொலைபேசி எண்களுக்கு முன்வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

---

### அஸ்கிரிய...

முன்னர் நாட்டில் பாதுகாப்பு நிலை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக் கேட்டுக்கொண்டனர்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தை நடத்தி அதன் பெறுபேறாக தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் பௌத்த பிக்குமாருடன் ஆலோசனை நடத்திய பின்பே முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். (ம)

---

### சமுர்த்தி..

னாலேயே நிவாரண வெட்டை அமுல் படுத்தவேண்டி உள்ளது என்றும் படையினர் பொலிஸார் மற்றும் ஊர் காவற்படையினர் ஆகியோரது குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரணத்தை நிறுத்துமாறும் அமைச்சர்பணித்துள்ளார்.

(த)


# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில்

## மஹோற்சவம்- 2002

06-09-2002 பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி 17 நாட்கள் உற்சவம் நடைபெறும்

19.09.2002 சப்பறம் இரவு 8.00மணி
20.09.2002 தேர் காலை 9.00 மணி
_1.09.2002 சமுத்திர தீர்த்தம் பிற்பகல் 3.00 மணி
22.09.2002 கேணித்தீர்த்தம் பகல் 11.00 மணி

இப்புனித காலத்தில் ஆசாரசீலராக அனைவரும் வருகைதந்து எம் பெருமான் அருள் பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம் மஹோற்சவம் சிறப்புற அமைய பின்வருவனவற்றை கவனத்தில் கொள்க.

1 பவுண்ஆபரணங்கள் அணிவதைத்தவிர்த்தல்/ குறைத்தல்
2 உள்வீதியில் புகைப்படம், V.D.O எடுப்பதைத் தவிர்த்தல்
3 வாகனங்கள் வீதி ஒழுங்கை பேணுதல்–உரிய இடத்தில் நிறுத்துதல்.

பண்ணிசைப் போட்டிகள்

| பிரிவு | தரம் | போட்டித்தினம் | நேரம் | ஓதுதல் |
|---|---|---|---|---|
| மேற்பிரிவு | 11–13 | 14–09–2002 | 1.30 | பஞ்சபுராணம் |

20.09.2002 தேர் காலை 9.00 மணி
21.09.2002 சமுத்திர தீர்த்தம் பிற்பகல் 3.00 மணி
22.09.2002 கேணித்தீர்த்தம் பகல் 11.00 மணி

இப்புனித காலத்தில் ஆசாரசீலராக அனைவரும் வருகைதந்து எம் பெருமான் அருள் பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம் மஹோற்சவம் சிறப்புற அமைய பின்வருவனவற்றை கவனத்தில் கொள்க.

1 பவுண்ஆபரணங்கள் அணிவதைத்தவிர்த்தல்/ குறைத்தல்
2 உள்வீதியில் புகைப்படம், V.D.O எடுப்பதைத் தவிர்த்தல்
3 வாகனங்கள் வீதி ஒழுங்கை பேணுதல்—உரிய இடத்தில் நிறுத்துதல்.

**பண்ணிசைப் போட்டிகள்**

| பிரிவு | தரம் | போட்டித்தினம் | நேரம் | ஓதுதல் |
|---|---|---|---|---|
| மேற்பிரிவு | 11–13 | 14–09–2002 | 1.30 | பஞ்சபுராணம் |
| மத்திய பிரிவு | 8–10 | 15–09–2002 | 1.30 | பஞ்சபுராணம் |
| கீழ்ப்பிரிவு | 7கீழ் | 16–19–2002 | 1.30 | தேவாரம், புராணம் |

விதி- 1 ஒவ்வொருபிரிவும் நாலாயிரம் திவ்வியப் பிரபந்தத்தில் ஒருபாடல் ஓதுதல் வேண்டும்.
2 பாடசாலை அதிபரின் உறுதியுரையுடன் விண்ணப்பிக்கவேண்டும்.
3 நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.
4 விண்ணப்ப முடிவுத்திகதி 12–09–2002 முன் செயலாளர் அறங்காவலர்சபை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் துன்னாலை வடக்கு புலோலி என்ற விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
துன்னாலை வடக்கு, புலோலி
[C/4966]
அறங்காவலர் சபை.
03.09.2002

தேரேறிவரும் நல்லைக்குமரன் தாழ் பணிந்து வேண்டுகின்றோம்

**ஜே.எல். மொறிசன் சன் ஜோன்ஸ் இன்**
**(J.L.MORISON SON JONES CEYLON LTD)**

யாழ்ப்பாணத்துக்கான ஏக விநியோகஸ்தராக

**தி பெனின்சுலா குறூப்**
**(The Peninsula Group)**

நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

NO 127/10 ரெம்பிள். றோட்
யாழ்ப்பாணம்
TEL: 021 - 3720

பட்டப்பட்டுள்ளது. (இ)

## பருத்தித்துறையில்...

(வயது 22) என்ற இளைஞன் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை படையினரால் மூடப்பட்டிருந்த சில வீதிகள் நேற்றுத் திறக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் இருந்த மக்கள் பலர் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறிதை அவதானிக்கமுடிந்தது. (இ-23)

படும் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். (ம)

## சமுர்த்தி..

ணாலேயே நிவாரண வெட்டை அமுல்படுத்தவேண்டி உள்ளது என்றும் படையினர் பொலிஸார் மற்றும் ஊர் காவற்படையினர் ஆகியோரது குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரணத்தை நிறுத்துமாறும் அமைச்சர்பணித்துள்ளார். (த)

தேரேறி வரும் முருகப்பெருமான் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்

**காரை துரித காகிதாதிகள் சேவைகள்**
**KQDS**

ஆஸ்பத்திரிவீதி (5878) காரைநகர்

**சமாதான வழிபாடு**

எமது நாட்டின் சமாதான முயற்சிகள் வெற்றிபெற தூய ஆவியின் அருளும் இறை ஆசியும் வேண்டும் வழிபாடு

06.09.2002 – வெள்ளி
காலை 10 மணி முதல் மாலை 5மணி வரை
செபமாலைத்தியானம்
திருப்பலி, நற்கருணை வழிபாடு

புனித அந்தோனியார் ஆலயம்
மானிப்பாய்
குருக்கள், கன்னியர், இறைமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


(13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் பங்குமட்டத்தில் வழிபாடுகள் நடைபெறும்.)

[C/4965] இறை தியான குழுவினர்

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# வலம்புரியின்
# நல்லூர்க் கந்தன்
# தேர்ச் சிறப்பு மலர்

05.09.2002





# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்



இன்று தேரேறி உலா வரும் நல்லைக் குமரனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

✡ இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள்
✡ பெயின்ற் வகைகள்
ஆகியவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

**கந்தவேலன் ரேடர்ஸ்**


மல்ரிலக் பெயின்ற் வகைகளின்
ஏக விநியோகஸ்தர்களும் விற்பனையாளர்களும்



**கந்தவேலன் ரேடர்ஸ்**

110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone :- 021- 2822

### நல்லூரான் திருவடிக்கு – 24



**அமைதியைத் தேரினில் தாருமே!**

அந்த நாள் முதல் இந்த நாள் வரை
கந்த னேஉன்னி டம்வந்து
எங்களின் துயர் தீர்த்திடு என்று
சிந்தை நொந்துமன் றாடினோம்
சொந்த மண்ணினில் சுகமிழந் திங்கே
மந்தி கள்போல லைந்திடும்
உந்த னின்னடி யார்க்கு அமைதியை
தேரி னில்வந்து தாருமே.

கவிமணி அன்னைதாஸன்.

மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்க
இன்று தேரேறும் நல்லைக் குமரன்
அருள் பாலிக்கட்டும்.

நங்கையர் விரும்பும் நவ நாகரிக தங்க
நகைகளை அசல் 22 கரட்டில் பெற்றுக்கொள்ள

**நியூ கார்த்திகா**



**நகை மாடம்**




[C/5035]

06, மகாராஜா கட்டடம், சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.

அனைவருக்கும் இன்று தேரேறும் நல்லைக் கந்தன்
அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் மங்களகரமான
வைபவங்களை அதி நவீன முறையில்
வீடியோ பிடித்துக் கொள்ள



**புலவர் வீடியோ**

தில்லையம்பதி, (C/5022) கோண்டாவில்.

தொல்லை வினை போக்கும் நல்லைக் கந்தனின் ரத பவனி
நம் இனத்திற்கு நன்மை அளிப்பதாக அமையட்டும்.

✡ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள் ✡ றெடிமேட் ஆடைகள்
✡ அழகுசாதனப் பொருட்கள்

போன்றவற்றை நியாய விலையில் பெற்றிட



**சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்**

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்மேற்கு, இணுவில். [C/5034]

அனைவருக்கும் இன்று ரத பவனி வருகின்ற நல்லைக்
கந்தன் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

☼ பாடசாலை உபகரணங்கள்
☼ அலுவலக உபகரணங்கள்
☼ அச்சகங்களுக்குரிய பேப்பர், மைவகைகள்

போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள யாழ் நகரில் சிறந்த இடம்



**அற்புதா ரேடிங் கொம்பனி**

198, (404A), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone : 021-2505 [C/5033]

மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்க இன்று
தேரேறும் நல்லைக் குமரன் அருள் பாலிக்கட்டும்.

❖ நம்பிக்கை ❖ நாணயம்
❖ உத்தரவாதத்துடன் தரம் மிக்க தங்க
நகைகளைப் பெற்றுக்கொள்ள



**பிறேம் நகை**

(தங்கப்பவுண் வியாபாரம்)

**மாடம்**

யாழ் வீதி, மானிப்பாய். (C/5023)

பாரெல்லாம் போற்றி செய்யப் பவனி வரும் முருகா!
தேரினில் வந்தெம்மைக் காத்திடுவாய் குமரா!!

மங்கையர் மயங்கும் மங்காத
அசல்22 கரட் தங்க நகைகளுக்கு

**கீதா ஆபரண மாளிகை**

(சாவகச்சேரி)





கே. கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். [C/5024]



# நல்லைக் குமரன் இரதோற்சவ சிறப்பு மலர்






எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் இன்று இரத உலா வரும் நல்லைக் கந்தனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

உன்னத கலை நயம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட யாழ் நகரில் சிறந்த நகையகம்.



**விதுர்ஷிகா நகையகம்**

1/5, கஸ்தூரியார் வீதி, [C/4592] யாழ்ப்பாணம்.

நியூ லலிதா ஜுவலர்ஸ்



பாரினைக் காத்திட இன்று தேரினில் வலம் வரும் நல்லைக் குமரா! உன் அடியார் குறை தீரும் ஐயா!

உங்களது அங்கங்களில் எங்களது தங்க நகைகள் மின்னிப் பிரகாசிக்க இன்றே நாடுங்கள்


**நியூ லலிதா ஜுவலர்ஸ்**

170, கஸ்தூரியார் வீதி, [C/4593] யாழ்ப்பாணம்.

அல்லல் தீர்த்து அருளை அள்ளி வழங்கும் நல்லை ஆறுமுகப் பெருமானின் அருள் அனைவர்க்கும் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

* கொம்பியூட்டர்கள்
* T.V வகைகள்
* அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
* டெக் வகைகள்

மற்றும் சகல விதமான மின் உபகரணங்களுக்கும்



**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**


இல: 01C, ஸ்ரான்லி வீதி, T.Phone : 021 - 3408 யாழ்ப்பாணம். [C/4594]



வள்ளி – தெய்வயானையுடன் தேரில் வலம் வரும் நல்லைக் குமரா!
உன் அடியார் குறை தீரும் ஐயா!!



* புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள்
* அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்



* T.V. டெக் வகைகள்
* றேடியோ வகைகள்
* அன்ரனா வகைகள்

போன்றவற்றை மொத்தமாகவோ சில்லறையாகவோ யாழ் நகரில் பெற்றுக் கொள்ள

**இ.சு.பேரம்பலம் சக நிறுவனம்**

**E.S.PERAMPALAM AND CO**

(PEPSI,MIRINDA,7UP, மெகா போன்றவற்றிற்கான ஏக விநியோகஸ்தர்கள்)

50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


T.Phone : 021 - 2988
021 - 3096

Fax: 021 - 2368

[C/4597]



# நல்லைக் குமரன் இரதோற்சவ சிறப்பு மலர்



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



நல்லைக் கந்தன் இன்று தேரேறி வருகின்றான்! நாளும் நமக்கெல்லாம் நல்ல அருள் பாலிப்பவன்! பீடும் பிணியும் பறந்தோடி, நாடும் வீடும் சமதான வாழ்வு நாடி நிற்கின்ற இந்த வேளையில் தங்க ரதமேறி துங்க முகத்தான் தம்பி வெம்பி நிற்கின்ற மனங்களின் வேதனை தீர்க்க வருகிறான்!

துன்பங்களும், துயரங்களும் இன்னல்களும் இடுக்கண்களும் தான் எங்கள் வாழ்வா என்று ஏம்பலித்த உள்ளங்களுக்கு தெம்பு தர, தென்னாடுடை சிவனின் மைந்தன் தேரேறி வருகிறான்!

இன்று முதல் எங்கள் துன்பம் எல்லாம் பறந்தோடும் துயரமெல்லாம் விட்டேகும்.

நாடி வந்த அன்பர்களுக்கு தேடி வரம் ஈய்ந்தளிப்பான் எங்கள் தமிழ்க்குமரன். இல்லை இனி எங்கள் குடிக்குத் தொல்லை!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

## சிவத்தமிழ் அன்னையின் ஆசியுரை



"எந்தாயு மெனக் கருள் தந்தையும் நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே"

கந்தரனுபூதி

தமிழ் மக்களின் உள்ளங்கள் முருகன் உறையும் ஆலயங்களாகும். மிகப் பழங்காலந்தொட்டே முருகனைக் கண் கண்ட தெய்வமாக நினைத்துப் போற்றி வந்தவர்கள் தமிழர்கள். முருகா என்று ஒரு முறை கூவியழைத்தாற் போதும்; அவன் அன்பர்க்கு அன்பனாகவும் அடியவர்க்கு எளியவனாகவும், கவிஞர்க்குப் புலவனாகவும் காட்சியளிப்பான். 'நெஞ்சில் ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா என்றோதுவார் முன்' என்று பாடினார்கள். இவ்வாறு அருள் பொழியும் முருகப் பெருமான் நல்லைப் பதியில் விரும்பி உறைந்து எம் மக்களின் துயரைப் போக்குகின்றார். இத்தகைய நல்லைப் பெருமானின் மகோற்சவ காலம் உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்களின் பக்திக்கும், வழிபாட்டுக்கும் உரிய காலமாக விளங்குகின்றது. எம்பெருமான் தேரில் ஆரோகணித்து வரும் காட்சியைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். இத்தகைய அருட் காட்சியைக் காண உலகெங்கிலும் வாழும் முருகனடியார்கள் நல்லைப் பதியில் குவிந்த வண்ணம் உள்ளனர். எம்பெருமானின் அருட் காட்சியை நாமும் கண்டு இறும் பூது எய்துவோமாக.

*சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி*
*தங்கம்மா அப்பாக்குட்டி*
*தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி*
*தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*


துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ இன்று தேர் உலா வரும்
நல்லைக் கந்தனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

☆ கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் ☆ வாசனைத் திரவியங்கள்
☆ குளிர்பானங்கள் தயாரிப்பதற்கான எசன்ஸ் வகைகள்

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள



ஸ்ரீகரந் எசன்ஸ்




அன் குறோசறீஸ்

[C/5038]

161 (A), கே.கே.எஸ்.வீதி, Phone: 021 -2219 யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் இன்று தேரேறும் நல்லைக் கந்தன்
அருள் பாலிக்கட்டும்!






*உங்கள் இல்ல நிகழ்வுகளை வர்ணக்*
*கலரில் புகைப்படம் பிடித்துக் கொள்ள*

போட்டோ ரவி அன் வீடியோ


[C/5039]

139, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் முன்பாக)
யாழ்ப்பாணம்.





துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட இன்று திருத்தேர் உலா வருகின்ற
நல்லைக் குமரன் யாவருக்கும் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.



சகல விதமான மின்சார
உபகரணங்களையும்
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள

JAFFNA ELECTRICALS

உலகின் முதற் தரமான *LG* மின்சார சாதனங்களின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாண மின்னகம்

06, ஸ்டான்லி வீதி. [C/5042] யாழ்ப்பாணம்.



ஹரிஹரணன்
பிறிண்டேர்ஸ்

*General and Commercial Off-Set Printers & Computer Designers*



காவடிகள் புடைசூழ
பக்தர் கூட்டம் சூழ்ந்து வர
வேத தோத்திரங்கள் முழங்க
சித்திரத்தேரில் பவனிவரும்
நல்லைக் கந்தனே !
மக்கள் துயர் துடைக்க
வருக! வருக!




இல: 424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
தொ.இல - 021-2717



# நல்லைக் குமரன் இரதோற்சவ சிறப்பு மலர்



## நாலு திசையிருந்தும் நல்லூரான் தேர்காண நாடிவரும் பக்தர்கள் நல்வாழ்வு பெறுவார்கள்



இன்றைய தினம் பக்தியும் மகிழ்ச்சியும் பொங்கும் திருநாள். யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ் மக்களின் தேசிய பெருவிழா. நல்லைக் கந்தன் தேர்த்திருவிழா. தேவியரிருவருடன் நல்லைக் கந்தன் தேரேறி வருகின்ற தெய்வீகத் திருக்காட்சியைக் கண் குளிர, உள்ளம் அன்புருகக் காணும் நன்னாள்.

முருகப் பெருமானை விரும்பி வழிபடும் அடியவர்கள் காதலால் கண்ணீர் மல்கி, உடல் புளகம் பெற்றுப் பேரானந்தம் மேன் மேலும் பெருகக் ''கந்தா! குமரா!! சரவணபவ'' என்றும் முருகனுக்கு அரோகரா என்றும், அன்புருகி நிற்க, முருகன் புகழ் கூறும், பஜனைப் பாடல்களைப் பக்தர்கள் மெய்யன்புடன் பாட, ''நல்லைக் கந்தா! நீயே துணை'' என்று சொல்லிக் கொண்டு அடியளித்தும், அங்கப்பிரதிட்டை செய்தும் முருகப்பெருமானின் தேரைப் பின் தொடர்ந்து செல்ல, ''சரண் புகுந்தோம் எமைக்காப்பாய்'' என்று சொல்லி காவடியை ஏந்தி வரும் ஏராளமான அடியவர்கள் திருவீதியை வலம் வர, தவில், நாதஸ்வர இசை பொழிய, பக்தர்களின் அன்பு வெள்ளத்தின் மீது தேரில் மிதந்து வருகிறார் நல்லைக்கந்தன்.

### தேரின் தொடர்பு

தேரின் அமைப்பு பிரபஞ்சத்தைக் குறிப்பதாக உள்ளது. தேரின் அடிப்பாகம் நாம் வாழும் பூமி உட்பட கிரகங்கள் பலவற்றையும் கொண்ட அண்டத்தைக் குறிக்கும். தேரின் மேற்பாகமும் அண்டங்களின் உள்ளடக்கமான பிண்டத்தைக் குறிக்கும்.

முப்புரம் எரித்த திருவிளையாடலுடன் தேரானது தொடர்புபட்டது. முப்புரத்து அரக்கர்களை அழிக்க சிவபெருமான் தேரேறிச் சென்றார் என்று புராணங்கள் கூறும். முப்புரம் என்பது ஆன்மாவை வருத்துகின்ற ஆணவம், கன்மம், மாயை என்பவற்றைக் குறிக்கும் என்பதே திருமூலநாயனாரின் விளக்கம்.

எம்மைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றை அழித்து திருவருள்தர நல்லைக் கந்தன் வள்ளி, தெய்வயானை சமேதராக தேரேறி வருகிறார்.

**சைவப்புலவர் சி.நந்தகுமார்**

தேரின் கோபுரம் ஒருங்கிச் சென்று வெள்ளிக் குடையில் முடிவடைகிறது. எங்கள் உள்ளக் கமலமும் ஒருமைப்பட்டு நல்லைக்கந்தனின் பாதக்கமலங்களை வணங்கினால் முருகப்பெருமானின் அருட்குடையின் கீழ் எங்களுக்கு துன்பவெயில் படாது.

### இதயபீடம்

ஆறுமுகப் பெருமான் தேரின் பீடத்தில் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. எமது வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு இதயமாகிய பீடத்தில் முருகப்பெருமானை இருத்தவேண்டும்.

நல்லைக் கந்தனின் திருத் தேர்வடம் பிடித்தால் அவன் கழலில் இடம் கிடைக்கும் எனப் பெரியோர்கள் சொல்லியதை எண்ணித் திருத்தேர் வடம் பிடித்தால் ஆண்மை, அழகு, செல்வம், எவரும் மதிக்கும் வளம்யாவும் பெருகும்.

நல்லூரான் தேரடி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தவயோகி செல்லப்பா சுவாமிகளின் திருப்படைவீடு, சிவயோகசுவாமிகளின் சிவயோகப்பட்டறை. ஞானத்தின் திருவுருவான இவ்விருவரும் நல்லைக்கந்தன் திருவருளால் பல ஆன்மீக உண்மைகளை உணர்ந்தார்கள்.

''எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே'' என்றும் ''நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனதோடு நாம் கந்தனை வணங்கினால் எங்கள் சிந்தை தெளியும்'' என்றும் ஞானிகள் எங்களுக்கு நல் வழிகாட்டியுள்ளார்கள்.


### பணிந்தவர் பயனடைவர்

''வேதாந்தம் கற்றாலென்ன வேடிக்கைக் கதைகள் பேசினால் என்ன, நல்லூர் வீதியில் வந்து விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் இல்லை என்றார்கள் அருளாளர்கள். கற்றதன்பயன் இறைவன் கழல்களை வணங்குவதற்கேயாம்.

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு பெற்று, அந்த நல்லறிவின் முடிந்த பயன் முருகப்பெருமானின் திருவருள் பெறுவதே ஆகும்.

எங்கள் உள்ளக்கமலத்தை நன்கு விரிவடையச் செய்து அதில் தேரேறிவரும் நல்லைக் கந்தனை இருத்தி மிகுந்த உள்ளன்புடன் அன்புருக வணங்கினால், நாங்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். கார் மயில் வாகனனைச் சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு தாழ்வு இல்லையே!

### நல்லூரான் திருவடிக்கு - 24



**சமாதானம் மலரணும்**

தங்கரதம் ஏறிவரும் சண்முகா - நீ
சங்கரனின் இறை மைந்தன் அல்லவா
எங்கள் துன்பம் உணர்ந்து பாரய்யா - நாம்
நிம்மதியாய் வாழவேண்டும் - முருகையா

நாட்டிலுள்ள இனவாதம் கருகணும் - உலகில்
நாற் திசையும் தமிழன் புகழ் பெருகணும்
வாட்டுகின்ற சட்டம் எல்லாம் நீங்கணும் - நம்
நாட்டினிலே சமாதானம் மலரணும்.

பரம் விதுர்சன்

**பாசத்துடன் வந்தருள்வான்**


நல்லையம்பதிதனிலே நாவார பாடி நிற்க
நல்லருள் புரிவான் நல்லை முருகன்
வாயாரப் பாடி நின்று வலம் வந்து வணங்கிடவே
வந்தருள் புரிவான் நல்லை முருகன் (நல்லையம்)

தேவர்கள் கூடி நின்று தேவாரம் பாடிடவே
தேவர் குலம் காத்திடுவான் நல்லை முருகன்
பாராயணம் செய்து பக்தர்கள் பாடி வர
பாசமுடன் வந்தருள்வான் நல்லை முருகன் (நல்லையம்)

தங்கரத தேர் ஏறி தளிர் கொடி தாங்கி நின்று
தாயகம் காத்தருளும் நல்லை முருகன்
வந்திடும் அடியவரும் வானவரும் போற்றிடவே
வலம் வந்து அருள்வான் நல்லை முருகன் (நல்லையம்)


துர்க்கா கவிஞானி,
துர்க்காபுரம்.




எல்லோருக்கும் இன்று தேரேறும் நல்லைக் கந்தன்
அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம.
அழகிய கலை நயம்
எழிலுறு தொழில் வளம்
உயர் தரமிகு தங்க நகைகளுக்கு
தயா
நகைப் பூங்கா
213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[C/5021]



நல்லைக் குமரனின் ரத பவனி யாவருக்கும் நன்மை அளிப்பதாக அமையட்டும்.


உருக்கினால் உருவாக்கப்பட்ட கட்டில்வகைகள், அலுவலக
மேசைகள், குசன் செற்றிகள், T.V. ஸ்ரான்ட் வகைகள்
மற்றும்
மரத்தளபாடங்கள் போன்றவற்றை மொத்தமாகவோ சில்லறையாகவோ
பெற்றுக்கொள்ள
மாருதி தளபாட நிலையம்
27, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாருதி வெல்டிங் வேர்க்சொப்
14/7, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
[C/5022]




# நல்லைக் குமரன்

## இரதோற்சவ சிறப்பு மலர்




அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க இன்று தேரேறும் நல்லைக் குமரனின் அருள் நாடி நிற்கின்றோம்.



- புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
- அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
- பற்றறி வகைகள்
- அஸிட் வகைகள்

போன்றவற்றை நிதான விலையில் பெற்றிட

பிரான்சியத் தொழில்நுட்ப முறையில் உருவானதும் ஜப்பானிய உதிரிப்பாகங்கள் பொருத்தக் கூடியதுமான டய்டோ (DAIDO) மோட்டார் சைக்கிள்களுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

பாலவிநாயகர் மோட்டோர்ஸ்

**பாலவிநாயகர் மோட்டோர்ஸ்**



08,12,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5011]



நல்லைக் கந்தனின் ரத பவனி நம் இனத்திற்கு நன்மை அளிப்பதாக அமையட்டும்.

அசல் 22கரட் தங்க நகைகளை உங்கள் மன நிறைவுடன் பெற்றுக் கொள்ள நகரில் சிறந்த ஸ்தாபனம்



**உதயகதிரவன் நகை மாடம்**

172,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்**

213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C/5013]



துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட இன்று தேரேறும் நல்லைக் கந்தன் அனைவருக்கும் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளா?
நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளா?
அசல் 22கரட் தங்க நகைகளா?

உங்கள் கனவை நனவாக்க இன்றே விரையுங்கள்



**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

Phone: 021 - 2694


[C/5014]



தொல்லை வினை போக்கும் நல்லைக் கந்தனின் ரத பவனி நம் இனத்திற்கு நன்மை அளிப்பதாக அமையட்டும்.



உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில், அதி நவீன போட்டோப் பிரதி இயந்திரம் மூலம் போட்டோப் பிரதிகளை செய்து கொள்ளவும்



யாழ் நகரில்

**கே. எம். எஸ் கொமினிக்கேசன்**

146, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி: 021 - 2007
021 - 3079
077 - 801038
தொ. நகல்: 021 - 2508

தலைநகரில்

**கே.எஸ்.எம் ரான்ஸ்போர்ட்**

67A, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13.

தொ.பேசி : 074 - 612656
HOT LINE : 072 -266108,077 - 507019
தொ. நகல் : 074 - 612656



**விஜிதா ரெக்ஸ்**

109, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5012]




பாரினைக் காத்திட இன்று தேரினில் வலம் வரும் நல்லைக் குமரா! உன் அடியார் குறைதீரும் ஐயா!

**VTG** வான் ஆசனப் பதிவகம் (யாழ் – கொழும்பு சேவை)

**VTG** தொலைத் தொடர்பு சேவை

**மற்றும்**

சகல விதமான தொலைபேசி வகைகள், கையடக்க தொலை பேசிகள், தொலைபேசிகளுக்கான இணைப்பு உதிரிப்பாகங்கள், சார்ச்சர் லைற் வகைகள், பற்றறி வகைகள் போன்றவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்



**செல்வம் ஸ்ரோர்ஸ்**

330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone: 021 - 3605, 3817

[C/5015]




இன்று தேரேறும் நல்லைக் குமரன் அனைவர்க்கும் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றிடவும், பக்ஸ், போட்டோப் பிரதி, கொம்பியூட்டர் ரைப்பிங் போன்றவற்றை செய்து கொள்ளவும் யாழ் நகரில் சிறந்து விளங்குபவர்கள்



**ஸ்ரீ முருகன்**



**தொலைத் தொடர்பகம்**

(SRI MURUGAN TELE COMMUNICATION SERVICE COMPUTER SYSTEMS AND AGENCY POST OFFICE)

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone: 021 - 2670, 3588


FAX: 021 - 3214

[C/5016]



# நல்லைக் குமரன்

## இரதோற்சவ சிறப்பு மலர்




பாரெல்லாம் போற்றி செய்யப் பவனிவரும் முருகா! தேரினில் வந்தெம்மைக் காத்திடுவாய் குமரா!



சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுவீற்றி நெல்லிரசத்தை ஒரு முறை அருந்திப் பாருங்கள் அதன் உண்மை உணர்வீர்கள்!

சுவீற்றி நெல்லி ரசம்

பலவருடங்கள் அனுபவம் வாய்ந்தவர்கள்

729, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 41/21, Pickerings Road, Colombo - 13. T.P: 954278

[C 5017]

காவடிகள் சூழ வண்ணத் தேரில் உலா வரும் சண்முகா! உன் அடியார் குறை தீரும் ஐயா!!

பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரையான சகல விதமான புத்தக வகைகளையும்

நூல்நிலையங்களுக்குத் தேவையான புத்தக வகைகளையும்

வாழ்த்துமடல்கள் மற்றும் பேப்பர் வகைகள்

பாடசாலை உபகரணங்கள்

போன்றவற்றையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

கடந்த நாற்பத்தி நான்கு வருடங்களாக கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி லட்சக்கணக்கான அறிஞர்களையும், பட்டதாரிகளையும் உருவாக்கியவர்கள்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

[C 5018]

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்று தேரேறும் நல்லை ஆறுமுகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

கேக் தயாரிப்பதற்கான சகல விதமான பொருட்கள் ✸ எசன்ஸ் வகைகள். வாசனைத் திரவியங்கள்

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் ஓரிடமாகப் பெற்றுக் கொள்ள

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

Pettah Essence Suppliers

104, ஆஸ்பத்திரி வீதி. Phone: 021 - 2386 யாழ்ப்பாணம்.

[C/5019]

KINGS ELECTRONICS


No 64, Stanley Road, Jaffna

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்


இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Computers, Tamil Audio Cd, Video Cd, Software Cd, Mp3 Cd, T.V, VHS டெக், VCD டெக், MP3 டெக், Table Fan

மற்றும் தரமான எலெக்ரோனிக் பொருட்களுக்கும் நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்.



எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.



# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்





துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட
இன்று தேரினில் ஏறிவரும் நல்லைக்
கந்தனின் அருள் நாடி நிற்கின்றோம்.

தங்கத் தரணியில் தமக்கெனத்
தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்

**விவேகா நகை மாடம்**

13 கஸ்தூரியார் வீதி, (c/5006) யாழ்ப்பாணம்.



நல்லூரான் குமரனுக்கு
இன்று தேர் உலா!
அவன் பாதம் நம்பினோருக்கு
இன்று அருள் மழை விழா!!

நவயுகம் மகிழும் புதுமலர்ப் பூங்கா
புது மணத் தென்றலில் பூத்து நிற்கும்
நவநாகரிக நகை உலகம்

**சிறீ மீனாட்சி தங்க மாளிகை**

187, கஸ்தூரியார் வீதி, (c/5007) யாழ்ப்பாணம்.



இன்று ரத பவனி வரும் நல்லைக் கந்தனின் அருள்
நாட்டு மக்கள் அனைவர்க்கும் கிடைக்க வணங்கி நிற்கின்றனர்
*ஸ்ரீவாணி நகை மாடத்தினர்*

**ஸ்ரீவாணி**

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக
தங்க நகைகளை அறிமுகம் செய்து வைப்பதில்
சிறந்து விளங்குபவர்கள்




**நகை மாடம்**

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (c/5008)

நல்லைக் குமரனின் ரத பவனி நாட்டு மக்கள்
யாவருக்கும் நன்மை அளிப்பதாக அமையட்டும்.

தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்

**சிறிமாரி**





**நகை மாடம்**

(c/5011)

49, (187), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.




உலகெங்கும் அமைதி நிலவ எம்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள் அனைவர்க்கும் இன்று
தேரேறும் நல்லைக் கந்தனின்
அருள் நாடி நிற்கின்றோம்.

அழகிய கலை நயம் மிக்க சுத்தமான 22கரட் தங்க நகைகளை
பெற்றிட நீங்கள் என்றென்றும் நாட வேண்டிய இடம்

**பிரசாத் நகை அகம்**

177GN, கஸ்தூரியார் வீதி, (வின்சர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம்.



இன்ற ரத பவனி வருகின்ற நல்லூர் கந்தன் அனைவருக்கும்
அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு
எழிலூட்டும் அசல் 22கரட் தங்க நகைகளுக்கு.....


**விஷ்ணு ஜுவல்லரி**



181, கஸ்தூரியார் வீதி, (c/5009) யாழ்ப்பாணம்.



# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்



இன்று தேரேறும் நல்லைக்கந்தனின் அருள் நாடி நிற்கின்றோம்.

தரமான ஐஸ்கிறீம் வகைகள்,
குளிர்பான வகைகள் சிற்றுண்டி
வகைகளுக்கு

**கல்யாணி**
**கிறீம் ஹவுஸ்**



72, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C/5005]

பார்போற்றும் நல்லைக் கந்தனின் தேர் உலா நாட்டு மக்கள் அனைவர்க்கும் நன்மை அளிப்பதாக அமையட்டும்



நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை அசல்
22 கரட்டில் செய்து பெற்றுக்கொள்ள

**நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்**

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்



**நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்**

*177, கஸ்தூரியார் வீதி,* *யாழ்ப்பாணம்.*

[C/5003]

முருகப் பெருமானுக்கு இன்று நல்லையில் தேர் உலா!
அவன் அடியவர்களுக்கு அருள் மழை விழா!

*மின்சார உபகரணங்கள், *எஸ் - லோன் பைப்புகள், *துவிச்சக்கர வண்டிகள், *அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்

அனைத்தையும் ஓரிடமாகப் பெற்றுக்கெள்ள



**சிவதர்ஷன்**

394, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone: 021 - 2417

[C/5004]

அல்லல் தீர்த்து அருள அள்ளி வழங்கும் நல்லை ஆறுமுகப் பெருமானின் அருள் நாட்டு மக்கள் அனைவர்க்கும் கிடைக்க வேண்டி நிறகின்றோம்.

- அழகிற்கு அழகூட்டும் அழகு சாதனப்பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கைக்கடிகாரங்கள்
- கைக்கடிகாரங்களுக்கான பற்றறி வகைகள்

அனைத்தையும் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் நீங்கள் நாடவேண்டிய இடம்



**ஞானம் அழகுமாடம்**

87, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C/5001]

காவடிகள் சூழ்ந்து வர இன்று தேரில் ஏறி உலா வரும் நல்லைக் கந்தனின் அருள்
அனைவரும் பெற்றிட வேண்டி நிற்கின்றோம்.

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி போன்ற இடங்களுக்கு குளிர் ஊட்டப்பட்ட சொகுசு பஸ்ஸில் நீங்கள் பிரயாணம் செய்ய இன்றே நாடுங்கள்.




**R.B.BOOKING CENTER**

20 வருட சேவை

அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்

**ஆர்.பி. (B) ஆசனப் பதிவகம்**

*15, Grand Bazaar,*
*Jaffna.*

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(வைரவர் கோவில் அருகில்)

[C/5002]



# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்




நல்லைக் குமரனின் திருத்தேர் உலா நம் இனத்திற்கு நன்மை அளிப்பதாக அமையட்டும்.

TVS Victor More smiles per hour

* புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள் * அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
* லான்ட்மாஸ்டர்கள் * பற்றறி வகைள் * ஹெல்மெற் வகைகள்

அனைத்தையும் நியாய விலையில் பெற்றிட யாழ் நகரில் சிறந்த இடம்





**யசோ மோட்டோர்ஸ் அன் ஹாட் வெயர்ஸ்**

163, 165, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5029]

ஐந்து கரத்தான் தம்பி ஆறுமுகனின் ரத பவனி அனைவருக்கும் நன்மை அளிக்கட்டும்.

* புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் * அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் * புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள் * அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்

போன்றவற்றை நியாய விலையில் பெற்றிட




**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5028]

அலைந்திடும் மக்கள் அமைதி பெற்றிட இன்று தேர் உலா வரும் நல்லைக் கந்தனை வேண்டி நிற்கின்றோம்.



* உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகு நிறைந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள
* முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ள
* மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ள

நீங்கள் என்றென்றும் நாட வேண்டிய இடம்

**எரிக் கணேஸ்**

564, 566, ஆஸ்பத்திரி வீதி, [C/5031] யாழ்ப்பாணம்.

பார் போற்றும் நல்லைக் கந்தனின் ரத பவனி நம் இனத்திற்கு நன்மை அளிப்பதாக அமையட்டும்.

யாழ் நகரில் கிளிப்சால் என்ற பெயரில் போலியான சுவிச் வகைகள் மலிவான விலையில் விற்பனையாகின்றன. அவுஸ்ரேலியா தயாரிப்பான உண்மையான கிளிப்சால் சுவிச் வகைகளை வாங்குவதற்கு கிளிப்சால் கம்பனியின் யாழ்மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்



**அபிராம் எலக்ரிக்கல்ஸ்**



மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்கள்

62/34, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C/5020]

அகிலமெங்கும் அமைதி நிலவ இன்று தேரேறும் நல்லைக் கந்தன் அருள் பாலிக்கட்டும்!

உன்னத கலைநயம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு. .




**சிறி கருமாரி நகையகம்**


177 D, கஸ்தூரியார் வீதி, [C/5030] யாழ்ப்பாணம்.

எங்கும் அமைதி நிலவிட இன்று ரத உலாவரும் நல்லைக் கந்தனின் அருள் நாடி நிற்கின்றோம்.

சகல விதமான மணிக்கூட்டு வகைகளை திருத்திக் கொள்ளவும் மணிக்கூடுகளுக்குத் தேவையான பற்றறி வகைகளைப் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



**சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்**



24, முனீஸ்வரன் வீதி, [C/5032] யாழ்ப்பாணம்.

பாரினைக் காத்திட இன்று தேரேறும் முருகா!
உன் அடியார்களுக்கு அருள்வாய் குமரா!!




தங்கத்தின் தரம்நிரந்தரம் அத்தரத்தை நீர்ணயிக்க

**வினோ நகைப் பூங்கா**



185, கஸ்தூரியார் வீதி, T.Phone/Fax: 021 - 2824 யாழ்ப்பாணம்.

[C/5027]



# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்



### ஊர், உலகெங்கும் சாந்தியும், சமாதானமும் நிலைக்கத்
## தேர்வடம் பிடித்துத் திருமுருகனை வேண்டித் துதிப்போம்

நல்லூர்க் கந்தன் நம்மையெல்லாம் காத்தருள்வதற்காக வள்ளி தெய்வயானையோடு இன்று வண்ணத் தேரேறி வருகின்றான். அவன் தேரிலேறி வருகின்ற போது தீவினைகளை எல்லாம் அழித்து, நல்வினைகளையெல்லாம் அளித்து, எல்லோரையும் நல்லவராய் வாழ வைப்பான். தீயவர்களை வீழ வைப்பான். இன்பங்கள் சூழ வைப்பான். அவன் தேரிலேறி வருகின்ற காட்சியைக் காண்பதற்கு ஆயிரம் கண்களும் போதாது. தேன் தமிழ்க்காவலன் தேரிலேறி வருகின்றபோது, பாவலர்கள் பாடும் பொருளாய்..., இரவலர்கள் இறைஞ்சும் அருளாய்..., நாவலர்கள் நாவில் பொருளாய்..., எல்லோர் நெஞ்சிலும் ஏகாந்தமாய் விளங்குவான்.

### புண்ணியவாழ்வு தருவான்

அழகன் முருகன் வண்ணத் தேரேறி எங்கள் எண்ணத் தேரேறி திண்ணமாய் நல்வரம் அள்ளி அளித்து... புண்பட்ட நெஞ்சங்களை பண்பட்ட நெஞ்சங்களாக்கி, கண்கெட்ட துயரங்களை மண்விட்டுத் துரத்தி, நாம் எண்ணும் வாழ்வினை, எண்ணிய வாழ்வினை ஒரு புண்ணிய வாழ்வினை திண்ணமாய்த் தந்தருள் புரிவானே.

வண்ணத் தேரேறி வடிவேலன் வீதியுலா வருகின்ற போது அவனுடைய அருட்காட்சி காண மக்கள் வெள்ளம் நிறைந்திருக்கும். அந்த மக்கள் வெள்ளத்தில் பக்தி வெள்ளம் பாயும். உள்ளம் எண்ணும் கள்ளம் மறைந்து பக்தி வெள்ளமே மேலோங்கி நிற்கும், கரைபுரண்டோடும். பக்தர் கூட்டம் இரு கரங்களையும் தூக்கி, கந்தனை நோக்கி, தீயஎண்ணங்களை நீக்கி, அரோகரா என்று நாவாலே சொல்வது வானைப் பிளக்கும். எல்லா உள்ளங்களிலும் அன்பும், அமைதியும் சாந்தமும் சமாதானமும் பிறக்கும். கந்தா, கடம்பா, கதிர்வேலா என்ற நாம பஜனையே எங்கும் ஒலிக்கும். அப்பொழுது துயரங்கள் ஒழியும். இன்பங்கள் பிறக்கும், வாழ்வு சிறக்கும். பொங்கு தமிழில் எங்கும் தங்கு தடையின்றி மங்கா முருகனின் நாமமே ஒலிக்கும்.

வடிவேலன் வண்ணரதமேறி வருகின்றபோது வடம்பிடித்து, அவன் மனதில் இடம் பிடிக்க பக்தர் கூட்டம் அலைமோதும். எப்போதும் முப்பொழுதும் அருளும் கந்தன், அலைமோதும் பக்தர்க்கு அருளினை அளித்து, மன இருளினை அகற்றுவான்.



### அருளாட்சி

நல்லூர்க் கந்தன தேர்காண பல்லூர் மக்களும் திரண்டு வந்து கந்தன் கழலினைப் பணிந்து நிற்பார்கள். நல்லூர்ப் பதி நாடி, நல்லூரானைத் துதி பாடி நிற்க, பழைய விதி ஓடி... புதிய விதி நாடி வருமே என்று திண்ணமாய் எண்ணி, கந்தனின் தேர் கண்டு, சீர்கொண்டு பணிந்து அவனடி பரவி நிற்பார்கள். அப்படிப்பட்ட அற்புதமான நல்லைக் கந்தனின் வடம் பிடித்து வளப்பாய் வாழ எல்லோரும் துணிய வேண்டும். அவனைத் துதிக்க வேண்டும்.

### சாந்தியும் சமாதானமும்

தேவர்க்கு அருளியவன் இன்று யாவர்க்கும் அருளவே தேரேறி வருகின்றான். தேரேறி வருகின்ற தேவசேனாதிபதியாம் நல்லைக் கந்தனின் எல்லை இல்லா அருளாலே, தொல்லைகள் யாவும் பறந்தோடும். இந்த நாட்டினிலே சமாதானமும், சகோதரத்துவமும். சமத்துவமும், சந்தோசமும், சத்தியமும், சரவணனின் சீரிய அருளினாலே நித்தியம் நிலைத்து நிற்கும். தந்தைக்கு உபதேசம் செய்தவன் இன்று தரணிக்கு உபதேசம் செய்ய வருகின்றான். நம் வாழ்வு உய்யச் செய்ய தேரேறி வருகின்றான். இன்பமழை பெய்யச் செய்ய தேரேறி வருகின்றான். யுத்தமும், பல்குழலின் சத்தமும், உலகெங்கும் ஓடுகின்ற இரத்த ஆறும், எம்சித்தத்தில் நித்தம் உறைகின்ற கந்தனின் அருளாலே மறைந்துவிடும். தேரேறி வருகின்ற கந்தனருளாலே சாந்தியும் சமாதானமும் நிலைத்து நிற்கும்.

தர்மராஜா அஜந்தகுமார்
யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்


இன்று தேரேறி வருகின்ற நல்லைக் கந்தனின் தேர் வடம் பிடிப்போம். நல்லூரான் மனதினிலே இடம் பிடிப்போம். வல்ல துணையாம் வடிவேலனால், நல்ல அருள் நித்தம் பெற்று, கொல்ல வரும் துயரங்களை துரத்தி எல்லவரும் நன்றாய் வாழ்வோமே.

''நல்லை நகர் நண்ணி
நம் கந்தனை எண்ணி
அடம் பிடித்து - தேர்
வடம் பிடித்து - அவன் மனதில்
இடம் பிடித்து
நன்றாய் வாழுவோமே''

நல்லைக் கந்தனின் தேரேறி வருகின்ற காட்சி கண்டு, மீட்சி பெற்று, நல்வாழ்வு பெற்று, எல்லை இல்லா மகிழ்வோடு தொல்லை இன்றி வாழுவோமே.

''கந்தனடி சரணம் சரணம்
- அவனடியில்
எம் பாவமெல்லாம் மரணம் மரணம்''

### நல்லூரான் திருவடிக்கு - 24



### மனத்தேரில் பவனி வருவாய்

புரம்வெந்து வீழப் புவித்தேர்மேல் நின்று
பொடிசெய்யப் புன்னகை புரிந்த
அரனாரெம் ஐயன் அருள்மைந்தர் நல்லூரர்
அசுராதி மாள அரிய
இரதத்தில் அன்று வரக்காணா நின்று
வருதல்கா ணவிரும் புபக்தர்
அவரவர் மனத்தேர்ப் பாகன்சே யாவான்
எனக்காணும் ஆற்றல் உளரே.

- சிவ. சண்முகவடிவேல்

### உளங்குளிர தேரில் வாறார்

ப,ரணனாம் ஆறுமுகர் தேரில் வாறார்
புண்ணிய ராம் இளமுருகர் தேரில் வாறார்
காரணனாம் காரியனாம் தேரில் வாறார்
நாரணனார் நல்மருகர் தேரில் வாறார்
நான்முகனார் ஞானகுரு தேரில் வாறார்
வாரணியும் இளமுலையாள் வள்ளி பங்கர்
வடி வழகி தெய்வயானை உடனதாக
தாரணிந்த திரு மார்பு அழகுகாட்டி
தரணி உளார் உளம் குளிர தேரில் வாறார்.

- நயினை திருமுருகமாமணி

### அழகுமணித் தேரினிலே ஏறி வருவாய்

எடுப்பு
சுந்தர மாமயில் வாகனனே - நல்லை
வந்தமர் சுந்தர வடிவேலா
தொடுப்பு
சிந்தைகு ளிர்ந்திடும் வண்ணமதே - இன்று
சுந்தரத் தேரேறி வாருமையா

முடிப்பு
ஆதிதமி ழழகனென அமர்ந்தவா
அல்லல்கெட நல்லவழி கூறும்வடி வேலா
பாதிமதி நதியோடும் சடையுடையான் பாலா
பன்னிருகை யழகாவெம் துயரங்கள் தீர
விதியென்று சொல்மூடர் நிலைவென்று அன்று
விண்ணவர்தம் சிறைமீட்ட வேலவனே நீயும்
ஏதிலிக ளாய்த்திரியும் எம்துயரம் தீர்க்க
எழில்கொஞ்சும் சித்திரத்தேர் தனிலேறி வருவாய்

- சு. குகதேவன்

### ஐயன் கழல் வணங்கியுய்மின்

கோடிசூ ரியர்கள் போலக்
குலவிடு முருக மூர்த்தி
குவலயத் திடர்க ளெல்லாம்
குலைந்திடச் சிதறி யோட
நாடியே முகங்க ளாறாய்
நற்கரம் முந்நான் காக
நவில்குடை கொடிக ளாட
நலந்தரு நல்லூர் தன்னில்
தேடியே யடியார் கூட்டம்
தேங்காய்க ளடித்து ஆடி
திக்கெலாம் மங்கலங்கள்
திறந்திறங் கொட்டி யாட
பாடியே புகழுந் தேரில்
பாவைய ரோடு வந்தான்
பகரும் வே லுடையான் பாதம்
பணிந்துபல் வரம் பெற்றுய்மின்

- முதுபெரும்புலவர் வை. க. சிற்றம்பலம்

### மயிலுலவ நலிந்துவிடும்

தேவியர் இருவரும் அருகிருக்க
தேரினில் உலவும் திருமுருகா
பாரினில் மாந்தர் படும் துயரை
வேலினைக் கொண்டு நீங்கிடுவாய்

பாரினில் சூழ்ந்த இருள்தானும்
நல்லூரான் வேலுலவ நீங்கிவிடும்
பக்தர்க்கு நேர்ந்த இடரெல்லாம்
நல்லூரான் மயிலுலவ நலிந்துவிடும்.

கே. வி. குணசேகரம்

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இன்று தேரேறும் நல்லைக் கந்தன் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.



சேமிப்பு மற்றும், கடன் திட்டம்

வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டு வரும் இலங்கையர்களுக்கு இதுவரையில் கிடைக்காத எண்ணற்ற அனுகூலங்கள்



வள வாழ்வை நாடி
கடல் கடந்துசெல்லும்
நம் தாய்த்திருநாட்டின்
புத்திரர்களுக்கும்
புத்திரிகளுக்கும்
ஒரு வரப்பிரசாதம்

கடல் கடந்து தொழில் புரியச் செல்லும் உங்கள் வாழ்க்கைச் சுமைக்கு தோள் கொடுப்பதற்கு மக்கள் வங்கியும், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் இப்பொழுது தயார்!

வைப்புக்களுக்கு உயர் வட்டி
கடன்களுக்கு குறைந்த வட்டி

- விமானப்பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் நேரிடக் கூடிய அனைத்துச் செலவுகளும் தொடர்பாக ரூ.50,000 வரையில் கடன். 9% வட்டியில்.
- ரூ.25இலட்சம் வரையில் வீடமைப்பு மற்றும் சுயதொழில் கடன்.
- ரூ.250,000 வரையிலான வீடமைப்புக் கடன்களுக்கு நம்ப முடியாத அளவுக்கு 9% குறந்த வட்டி.
- ரூ.500,000 வரையிலான சுயதொழில் கடன்களுக்கு நம்பமுடியாத அளவுக்கு 8% குறைந்த வட்டி.
- அதிலும் பார்க்கக் கூடிய தொகை கடன்களுக்கு கவர்ச்சிகரமான 17%வட்டி.
- வைப்புக்கள் தொடர்பாக வெளிநாட்டு நாணயத்தில் ஆகக் கூடிய வட்டி.
- பணத்தை வைப்பிலிடும் பொழுது நீங்கள் கொடுக்கும் எந்த ஒரு செய்தியையும் மக்கள் வங்கி உங்கள் வீட்டுக்கே தெரிவிக்கும்.
- கவர்ச்சிகரமான கடன் காப்புறுதித் திட்டம் - திடீர் விபத்து ஏற்பட்டால் கடன் சுமையிலிருந்து விடுதலை.
- மக்கள் வங்கியின் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுக்கூடாக உங்கள் வெளிநாட்டு பணக் கொடுக்கல் வாங்கல்கள் 24 மணி நேரத்தில்

இலங்கை வெளிநாட்டு
வேலைவாய்ப்பு பணியகத்துடன்




மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

[C5015]




# நல்லைக் குமரன் இரதோற்சவ சிறப்பு மலர்





அகிலமெங்கும் அமைதி நிலவ இன்று தேர் உலா வருகின்ற நல்லைக்குமரனின் அருள் நாடி நிற்கின்றோம்.



தங்க நகையுலகில் மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின் காட்சிக் கூடம்

## வீ.எம்.கே. ஜுவலரீஸ்

305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.No :- 070-212989
070-212963

[C/4598]

ஐந்து கரத்தான் தம்பி ஆறுமுகனுக்கு இன்று நல்லூரில் தேர் உலா!
அவன் பக்தர்களுக்கு அருள் விழா!

- புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா?
- மோட்டார் வாகனங்களா?
- அவற்றிற்கான உதிரிப்பாகங்களா?
- பற்றறி வகைகளா?

அனைத்தையும் நிதான விலையில்
ஓரிடமாகப் பெற்றிட

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்


108. ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

மெயின் வீதி.
சங்கானை.

## அருள் விநாயகர் றேடர்ஸ்

106. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C/4599]




அவனி எங்கும் அமைதி நிலவ இன்று தேரில் பவனிவரும் நல்லைக் குமரனின் அருள் நாடி நிற்கின்றோம்!

- கட்டடப் பொருட்கள்
- பெயின்ற் வகைகள்

போன்றவற்றை நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## கஜமுகன் ஹாட்வெயர்ஸ்



**CALTEX 2T** ஒயிலுக்கான வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்.

## கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


T.Phone: 021 - 2833

[C/5000]



# நல்லைக் குமரன்

# இரதோற்சவ சிறப்பு மலர்






அழகிற்கு அழகூட்டும் கனவுகளை நிஜமாக்கும்,
செல்லும் இடமெங்கும் சிறப்பூட்டும், கண்களைக்
கவர்ந்திழுக்கும் பெண்களுக்கான ரெடிமெட்
ஆடைகளின் காட்சிக் கூடம்

**றெஸ் பொயின்ட்**



23, பெரியகடை வீதி, [C/5026] யாழ்ப்பாணம்.



தொல்லை வினை போக்கும் நல்லைக் கந்தா!
உன் அடியார் குறை தீரும் ஐயா!!

**சேலைகளின் சோலை**
**பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்**

**இளவரசி ரெக்ஸ்ரைல்**



57,நவீன சந்தை, T.Phone: 021 - 2503 [C/5025] யாழ்ப்பாணம்.

எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் இன்று தேரேறும் நல்லைக் கந்தன் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.



**நவீன யுகத்தில்!**



SPIN DOT COM CARD

**புதிய பரிணாமத்தில்!**

மத்திய மயப்படுத்தப்பட்ட
கணனி வலைப்பின்னல் மூலம்
துரித சேவை



CAT SUPPER CARD



DOT COM CARD

இலத்திரனியல் வங்கிச் சேவை



CREDIT CARD




**கொமர்ஷல் வங்கி**


உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்




# நல்லைக் குமரன்
## இரதோற்சவ சிறப்பு மலர்



# நல்லூரான் திருவடிக்கு - 24







### வண்ண மயிலுடனேறி வா!

வண்ணத் தேரிலேறுபவனே வண்ணமயிலுடனேறிவா
வஞ்சனைகளகற்றி நல்வினைகளையருளுமய்யா!
எண்ணமதில் நிலைத்து ஏக்கங்களைத் தீர்த்திடுவோனே
-உந்தன்
எல்லையில்லா அருள்வேண்டிடத் துதிக்கிறோமே!

*- என். பிறேமசீலன் -*

### இப்பிரதேசம் எங்கட்கென்றுப தேசஞ் செய், வா!

போர்வெறி யாலே எங்கள் பூமியைச் சிறையாய் ஆக்கிச்
சீர்மிகு தமிழர் வாழ்வைச் சிதைத்ததை நசியச் செய்யும்
பேரின வாதப் பேயின் பிடரியை நொருக்கி வீழ்த்தித்
தேர்மிசை ஏறிவந்தெம் தேசத்தை மீட்பாய் கந்தா.

அப்பரம் பொருளே கேட்க அவர்க்குப தேசஞ் செய்தாய்
தப்பினைச் செய்த சூரைத் தாக்கினாய் சுரரைக் காத்தாய்
சுப்பிர மணியா! நல்லைச் சுந்தர முருகா! என்றும்
இப்பிர தேசம் எங்கட் கென்றுப தேசஞ் செய், வா!

ஊரெலாம் உந்தன் பாடல் உளமெலாம் உந்தன் கோலம்
பாரெலாம் தமிழர் என்றும் பரவுவார் உந்தன் கீர்த்தி
தேரெனில் நல்லூர்த் தேரே தேர்ந்துனைத் தொழவே வந்தோம்
பேரருள் புரிவாய் எங்கள் பூமியை எமக்கே ஈவாய்.

*- சிற்பி -*

### மன்னு திருத்தேரில் வா!

நல்லைத் திருத்தலத்தை நாடித் துதிப்பவர்க்கு
அல்லல் எதுவுமில்லை அவனியிலே - தொல்லைமிகு
இன்னல் களைந்தெமக்கு இனியநல் வாழ்வளிக்க
மன்னு திருத்தேரில் - வா.

*தென்நல்லை கு. பகீரதன்*

### சொந்தமே நீதானய்யா!

சந்தணத்தேரில் வரும்
கந்தனே யுனைக் காண
எந்தன் சிந்தை குளிருதே!
முந்தை வினை முழுவதுமே
ஓடி யொழிந்தனவே!
வந்தனை செய்தேன்! - கந்தா
அந்திய காலத்தில் எம்
சொந்தமே நீதானய்யா!

*- மாருதி -*


நல்லூர்க் கந்தன் தேர்
சிறக்க வாழ்த்துகி ன்றோம்.



**மிலேனியம்**
**ஓடியோ வீடியோ சென்ரர்**

- புதிய பழைய பாடல்களை நேரடி CD மூலம் பதிவு செய்யவும்
- CD ஒலிப்பேழைகளை வாடகைக்குப் பெறவும், போட்டோ பிரதிசேவை
- உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசிச் சேவைக்கும்
- V.C.D கொப்பிகளை வாடகைக்குப் பெறவும்

**நீங்கள் நாடவேண்டிய நம்பகமான இடம்**

**மிலேனியம்**
**ஓடியோ வீடியோ சென்ரர்**

238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021-3646


### முத்திதனைப் பெற்றிடுவமே!

ஆறுதலையில் முடியும் மார்பினில் உருத்திராக்கமணி
காவலன் வருகின்ற தேர்
சூரரைக் கருவறுத்து தேவர் சிறை மீட்டிநின்ற
காரணன் இவருகின்ற தேர்
சக்திகளெல்லாம் திரண்டு சக்தி கையிலே கொடுத்த
வேலுக்க உரிமையுடை தேர்
விண்ணுலகும் மண்ணுலகும் நன்மைபெற வாழ வைத்த
பண்ணழகன் ஏறிவரும் தேர்
